Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Thirumurugan Com Net
திருமுருகன் கொம் நெற்
WESTERN UNION Money Transfer
FedEx Express
Inland & I.D.D Calls, Internet-Browsing & E-mail, Fax, Photo Copy, Computer typing & Printing, Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services, & Computer-Hand phone Accessories,
259, K.K.S.Road Jaffna. Tel 021 222 3958 Fax 021 222 7836
E.mail thirumuruglan@lycosmail.com
45, Adiyapatham Road, thirunelvely, Jaffna. Tel - 021 222 7560 Fax - 021 222 7810

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 22 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 24 (06.01.2005) வியாழக்கிழமை இதழ்:98

# முல்லைத்தீவின் அழிவுகளையும் கொபி அனான் பார்வையிடுவார்!

## கொலின் பவலும் கொழும்பு வருகிறார்



கொபி அனான்



ஜேம்ஸ் வூல்பென்சன்

(யாழ்ப்பாணம்)

இரண்டு நாள் விஜயமாக இலங்கை வரவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி அனான், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முல்லைத்தீவுக்கும் விஜயம் செய்து சுனாமி அழிவுகளைப் பார்வையிடவிருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் மற்றும் உலகவங்கியின் தலைவர் ஜேம்ஸ் வூல்பென்சன் ஆகியோர் நாளை கொழும்பு வரவுள்ளனர்.

இரண்டு நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்ட அம்பாறை, காலி, அம்பாந்தோட்டை, மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிடவுள்ளனர்.

இந்தத் தகவலை வெளிவிவகார அமைச்சு நேற்று ஊர்ஜிதப்படுத்தியபோதும், ஐ.நா. வட்டாரங்கள், கொபி அனான் விஜயம் செய்யவுள்ள இடங்கள் குறித்த தகவல்களை வெளியிட மறுத்துவிட்டன.

இதேவேளை, அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் நாளை கொழும்பு வரவுள்ளார் என்பதை அமெரிக்கத் தூதரகம் ஊர்ஜிதம் செய்தது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடவுள்ள கொலின் பவல், அரசாங்கத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இவருடன் யு.எஸ்.எய்ட் நிர்வாகி அன்ரூ நட்சியவும் கொழும்பு வரவுள்ளார். இவரது கொழும்பு விஜயத்தின் முடிவில் செய்தியாளர் மாநாடு ஒன்றும் இடம்பெறவுள்ளது.



கொலின் பவல்

# நலன்புரி முகாம்களைப் பொறுப்பேற்கும் அரசின் முடிவால் திருமலையில் முறுகல்!

(திருகோணமலை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பில் இருந்த நலன்புரி நிலையங்களை இராணுவத்தினர் பொறுப்பேற்க எடுத்த நடவழக்கையை அடுத்து விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் திருகோணமலையில் முறுகல்நிலை தோன்றியுள்ளது.

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் நலன்புரி நிலையங்களை படையினரிடம் ஒப்படைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை அடுத்தே இந்த முரண்பாடு தோன்றியுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரிடம் நிவாரணப் பணிகள்:

# யாழ்.வந்த பின்னர்தான் ரணிலுக்குத் தெரியுமாம்!

(வடமராட்சி)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் முப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட விடயம் பற்றி யாழ்ப்பாணம் வந்த பின்னரே தான் அறிந்து கொண்டதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக வடமராட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, வதிரியிலுள்ள மனிதாபிமான புனர்வாழ்வுக் கருமபீடத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே

(12 ஆம் பக்கம் பார்க்க)



# பாப்பரசரின் பிரதிநிதியுடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மரியோ செனால மற்றும் வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த கத்தோலிக்க ஆயர்கள் - கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினர்.

சுனாமி அழிவால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திப்பது மற்றும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணம்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# அரசாங்கத்தின் முடிவுக்கு கூட்டமைப்பு கண்டனம்!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான உதவி, நிவாரண, புனர்வாழ்வுப் பணிகள் அனைத்தும் கூட்டுப் படைத் தலைமையகத்திடம் ஒப்டைக்க எடுக்கப்பட்ட தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டித்துள்ளது.

நேற்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திலேயே அரசாங்கத்தின் இந்த முடிவை எதிர்ப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

**கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தால் நிர்க்கதியான எம் மக்களுக்கு உதவுங்கள். நமது ஈழநாடு ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கு வாரி வழங்குங்கள். உங்கள் நிதியுதவிகளை வர்த்தக வங்கி (யாழ்ப்பாணம்) கணக்கு இல. 8060025404 அல்லது மக்கள் வங்கி (காங்கேசன்துறை கிளை) கணக்கு இல. 15897 க்கு அனுப்புங்கள்.**

# சுனாமியால் பாதிப்படைந்த மக்களுக்கு உளநலச் சிகிச்சை அளிப்பது அவசியம்

## பேராசிரியர் தயா சோமசுந்தரம் தெரிவிப்பு

சுனாமி கடற் கொந்தளிப்பால் உறவுகளை, உடமைகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அவர்களது உடல்நிலை குறித்துக் கவனம் எடுப்பதுடன் அவர்களுக்கான உளவியல் முதலுதவியும் அளிக்கப்படவேண்டும்.

இவ்வாறு சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளநலச் சிகிச்சை அளிப்பதற்காக அமைக்கப்பட்ட அனர்த்த உளநலப் பணிக்குழுவின் தலைவர் தயா சோமசுந்தரம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பொது சுகாதார மருத்துவருக்கான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுனாமி கடற்கொந்தளிப்பால் காயமடைந்து வருபவர்களுக்கு மருந்தினைக் கட்டி அனுப்புவதை விடுத்து, அவர்களின் கவலைகளிலும் பங்கெடுக்க வேண்டும். இதன் மூலம் அவர்களின் அரைவாசி துன்பங்களைக் குறைத்துக் கொள்ளமுடியும்.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் சிறுவர்களின் மன நிலையை மேம்படுத்துவதற்காக சிறிது நேரம் விளையாட்டும், சிறிது நேரம் படிப்பும் என மேற்கொள்வதோடு இளைஞர்களுக்கு பொறுப்புக்களை கொடுத்து செயலுருவாக்கத்தில் ஈடுபடுத்த வேண்டும். உறவுகளைக் காணாமல் தேடுவோருக்கு அவர்களைத் தேடிக் கொடுத்தல் அல்லது அதற்கான முயற்சிகளை எடுத்தல் வேண்டும். கூடுமானவரை உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து, ஒன்றாக இருக்கக் கூடிய வசதிகளைச் செய்து கொடுப்பது அவசியம்.

சுனாமி கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தினையும் அதனால் ஏற்பட்டிருக்கும் சேதங்கள் இழப்புக்களை மீண்டும் மீண்டும் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் வெளியிடும்போது இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் அந்தச் சம்பவத்திலிருந்து மீள முடியாத நிலை உருவாகும்.

சுகாதாரத் தொண்டர்கள் அவர்களுடைய உடலியல், சமூகவியலை மட்டும் கருத்திற் கொள்ளாது இதுபோன்ற உளவியலிலும் கவனம் எடுத்தல் வேண்டும். இதனைச் செயற்படுத்துவதற்காக உளவளத் துறை கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களின் உதவியோடு பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையை உளவியல் ரீதியாக திசை திருப்பலாம் எனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பிரதிச் சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.தெய்வேந்திரன், யாழ்.பல்கலைக்கழக சமூக மருத்துவத் துறை வைத்தியர் சுரேந்திரகுமார், வைத்தியர் சொலமன், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள், பெதுச் சுகாதார மருத்துவ மாதர்கள், பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (12)





மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் சேகரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை யாழ்.மாவட்ட அரசியற்துறை ஆறு லொறிகளில் உணவுப்பொருட்களை அனுப்பி வைத்துள்ளது. இந்த யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நேற்று மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லும் காட்சி.

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்விபயிலும் முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களுக்கான அவசர ஒன்றுகூடல் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு பீடாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.


## சிறு விளம்பரம்

### மோ.சைக்கிள் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள் வாடகைக்கு வழங்கப்படும். தொடர்பு: 360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P 0776 544544, 077 6660177 (1022)

### மாதாந்த தவணை அடிப்படையில்

சகல விதமான வீட்டுப் பாவனைப் பொருட்கள், மின்சார உபகரணங்கள், மோட்டார் சைக்கிள் என்பன மாதாந்தக் கட்டுப்பண முறையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு 360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கருகில்) யாழ்ப்பாணம். (1023)

நாதன்ஸ் யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)

குதூகல ஆரம்பம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

இலங்கை மண் தாவடியின் மைந்தன்ஜெய் ஆகாஷ், ஸ்ரீதேவிகா, வாணி நடித்த

ராமகிருஷ்ணா



காட்சி நேரம் - 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், த்ரிஷா நடித்த

சாமி (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

AIRFORCE I

ராஜா யாழ்ப்பாணம்.

விஜயகாந், லயா, சீதா, சரத்பாபு, ராதாரவி நடித்த

கஜேந்திரா (ரீல்ஸ்)

புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30

நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான

அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த



ஜெய் சூர்யா

கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)


## திருமறைக் கலாமன்றம் நடாத்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடு

திருமறைக்கலாமன்ற அங்கத்தவர்கள் சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உள ஆற்றுகைப்படுத்தல செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தனிநபர் உரையாடல் மூலமான உள ஆற்றுப்படுத்தலை நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்கிவரும் வேளை, நீண்ட கால உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஆரம்பமுயற்சிகளையும் மேற்கொண்டுவருகின்றனர்.

வித்தியாசமான வடிவங்களில் மிக எளிய முறையில் பாதிக்கப்பட்டமக்களைச் சென்றடையக் கூடிய வகையில் சில செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக திருமறை கலாமன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (91)

## செயலாளர் ஓய்வுபெற்றார்

(உடுவில்)

வலி.வடக்கு பிரதேசசபைச் செயலாளர் செ.செல்வரத்தினம் கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்.

நல்லூர் பிரதேசசபையில் நீண்டகாலம் பணியாற்றிய இவர் கடந்த இரண்டு வருடங்களாக வலி.வடக்கு பிரதேசசபை செயலாளராகக் கடமையாற்றினார்.

புதிய செயலாளர் நியமிக்கப்படும்வரை அவரின் பதில் கடமையை பிரதம லிகிதர் செ.விஜயானந்தன் பொறுப்பேற்றுள்ளார். (101)

## கல்வியியற் கல்லூரி முதலாம் தவணை ஆரம்பம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான இந்த ஆண்டிற்கான முதலாம் தவணை, எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும், முகிழ்நிலை ஆசிரியர்கள் முதல்நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறும் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

## பரீட்சார்த்த ஒலிபரப்பு

ஐ.பி.சி வானொலியின் பரீட்சார்த்த ஒலிபரப்பு 49 m -6010Kz இலும் 49 m -6055Kz இலும் ஒலிபரப்பாகி வருவதாகவும் தெளிவாகக் கேட்கக்கூடியாதாக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வழமையான ஒலிபரப்பு 41m-7450kz இல் தொடர்ந்து ஒலிபரப்பாகி வருகிறது.

இந்த ஒலிபரப்பை தினமும் காலை 6 மணிமுதல் 7மணிவரை கேட்கமுடியும்.

## பதினெட்டாம்படி உற்சவமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி ஐயனார் ஆலயத்தின் பதினெட்டாம்படி உற்சவமும் இயற்கை அனர்த்தத்தினால் இறந்த மக்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்தனை நிகழ்வும் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பு

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சமூக நலன் திட்டம் தொடர்பான பயிற்சி வகுப்பு நாளை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்றைய தினம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் செ.சிறினிவாசன் தெரிவித்தார். (29)

## ஒன்றியக் கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கோட்ட தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியத்தின் புதிய நிர்வாகத் தெரிவும், புதிய ஆண்டுக்கான ஒன்றியச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் கூட்டமும் நாளை பி.ப. 3 மணிக்கு தென்மராட்சி கோட்ட அரசியற்துறை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே பதிவுசெய்யப்பட்ட, பதிவுசெய்யப்படாத பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தும் கல்வி நிறுவன நிர்வாகிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது. (29)

## அறிவித்தல்

மேஜர் முரளி முன்பள்ளி 10.01.2005 அன்று ஆரம்பமாகவுள்ளது இதுவரை விண்ணப்பங்களை ஒப்படைக்காத பெற்றோர்கள் 09.01.2005 இற்கு முன்னர் முன்பள்ளிக்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். வருகை தராத பெற்றோர்கள் நீங்களாகவே அவ்விண்ணப்பத்தினை இரத்து செய்கின்றீர்கள் எனக்கருதப்பட்டு, தங்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம் என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.

தொடர்பு முகவரி:

நடுவப் பணியகம்
தமிழீழ மாணவர் அமைப்பு,
பரவிப் பாஞ்சான் கிளிநொச்சி.

(C/808)

## அவசர கலந்துரையாடல்

சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக சில முக்கிய செயற்பாட்டிற்காகக் கலந்தாலோசிக்க இருப்பதால் சகல ஆசிரியர்களையும் பணியாளர்களையும் 07.01.2005 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலைக்கு சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

அத்துடன் க.பொ.த. (உ/த) 2006 மாணவர்களும் அந்நேரத்தில் கலந்துகொள்ளவும்.

அதிபர்
கிளி/வட்டக்கச்சிமகாவித்தியாலயம்

(C/3596)

சாவகச்சேரி நகரசபை

01.02.2005 தொடக்கம் 31.12.2005 வரைக்குமான காலப்பகுதிக்கு கோழி இறைச்சிக்கடை நடாத்துவதற்கான குத்தகை

## கேள்வி அறிவித்தல்

கேள்விப் பத்திரம் வழங்குவதற்கான
கடைசித் திகதி:- 18.01.2005
கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும்
கடைசித் திகதி:- 20.01.2005 காலை 10.00 மணி
கேள்விகள் திறக்கப்படும் திகதி:- 20.01.2005 காலை 11.00 மணி

| இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப்பணம் மீளளிக்கப்பட கூடியது. | கேள்விப் படிவக் கட்டணம் மீளளிக்கப்பட முடியாதது |
|---|---|---|---|---|
| 01 | கோழியிறைச்சிக்கடை I | 55000/= | 1000/= | 200/= |
| 02 | கோழியிறைச்சிக்கடை II | 55000/= | 1000/= | 200/= |

குறிப்பு:-

☆ இறைச்சிக் கடைகளுக்கு விதிக்கப்படும் மாதவாடகை ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டும்.

☆ கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பனவற்றிற்கு 15% பெறுமதி சேர் வரி மேலதிகமாச் செலுத்த வேண்டும்.

☆ எதுவித காரணமுமின்றி கேள்வித் தொகைகளை ஏற்றுக் கொள்ளவோ/நிராகரிக்கவோ நகரசபை செயலாளருக்கு அதிகாரமுண்டு.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
05.01.2005

(C/3597)

திருமதி.கு.ஆறுமுகம்
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

# இலங்கைக்கு உதவிப் படைகளை கனடிய அரசும் அனுப்புகிறது!



கனடியப் படைகளின் அனர்த்த மீட்புக் குழுவினர் இலங்கையின் கிழக்கு பகுதிகளில் உதவிப் பணிகளில் ஈடுபடுவதற்காக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக கனடிய பாதுகாப்பு அமைச்சர் பில் கிரகாம் தெரிவித்தார். இது தொடர்பாக செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர்-

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக கனடாவின் பேரழிவு நிவாரண உதவிக்குழு நாளை இலங்கைக்குச் செல்லும்.

இந்தக் குழுவினர் சுனாமி அலைகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அடிப்படை மருத்துவ வசதிகளை வழங்குதல், தூய குடிநீரை வழங்குதல், அடிப்படை வசதிகள், மற்றும் சுகாதாரத் தேவைகளை ஏற்படுத்துதல், சர்வதேச தொண்டர் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல் ஆகிய பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

இந்தக் குழுவில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டவல்லுநர்கள், படைவீரர்கள் ஆகியோர் அடங்குகின்றனர்.

கனடிய பேரழிவு நிவாரண உதவிக் குழுவினர் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பண்டாரகம அதிர்ந்தது நிலநடுக்கமா என ஆய்வு!

(களுத்துறை)

களுத்துறை மாவட்டத்தில் பண்டாரகம தில்தெனிய பிரதேச செயலக கட்டடம் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் அதிர்ந்ததற்கான காரணம் நிலநடுக்கமா என ஆராயப்பட்டுவருகின்றது.

இந்தக் கட்டடம் அதிர்ந்ததால் நிலத்தில் பதிக்கப்பட்டிருந்த பளிங்குக் கற்கள் வெடித்துள்ளன. 2 மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடத்தின் சுவர்களிலும் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இது தொடர்பாக புவியியல் ஆய்வுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தத் திணைக்களத்தின் அதிகாரிகள் அங்கு விஜயம் செய்து ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இந்தக் கட்டடம் அதிர்ந்தமைக்கான காரணத்தை உறுதியாகக் கூறமுடியாதுள்ளதாக களுத்துறை மாவட்ட செயலர் தெரிவித்துள்ளார். அத்துடன் இது தொடர்பாக ஆய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் கட்டடம் அதிர்ந்ததை அடுத்து அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். (தே)

# நிவாரணப் பொருட்களை கையாடிய ஆசிரியர் கைது!

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட பெருமளவு உதவிப்பொருட்களை தனது வீட்டில் பதுக்கிவைத்திருந்த பட்டதாரி ஆசிரியர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மேற்படி ஆசிரியரின் வீட்டிலிருந்து 50 மூடை அரிசி, பருப்பு, பால்மா பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அதிகாரி ஹரிச்சந்திர பண்டார தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட ஆசிரியர் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் நலன்புரிநிலையமொன்றில் தொண்டராகப் பணியாற்றியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அம்பாறையிலுள்ள புத்தபிக்கு ஒருவர் ஒரு லொறிஅரிசியை வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்துள்ளார்.

ஆனாலும் பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றை அடுத்து குறித்த வர்த்தகர் கைதுசெய்யப்பட்டதுடன் அரிசியுடன் கூடிய அந்த லொறியும் கைப்பற்றப்பட்டது. எனினும் புத்தபிக்கு தலை மறைவாகி விட்டார்.

இதனிடையே பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட அரிசி 2000 கிலோ வரையில் அம்பாறையில் சேரன்கடவ, பொல்பிட்டிகம மற்றும் குருநாகல் போன்றவற்றில் வைத்து சேகரித்த வர்த்தகர்கள் கைதுசெய்யப்பட்டு மஹியங்கனை நீதிவான் நந்தனி அபேய வர்த்தன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

# பாகிஸ்தான் கப்பலும் கொழும்புக்கு புறப்பட்டது!

இலங்கையில் உதவிப் பணிகளை மேற்கொள்வதற்காக பாகிஸ்தான் கடற்படையின் கைபர் என்ற போர்க்கப்பல் கராச்சியிலிருந்து புறப்பட்டது.

கைபர் கப்பலின் கட்டளை அதிகாரியான கப்டன் அலி அபாஸ் கராச்சியில் செய்தியாளர்களிடம் பேசியபோது - தம்மால் முடிந்தளவுக்கு உதவிப் பணிகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்தார்.

நிவாரணப் பணிகளுக்கான சேகரிப்பு முகாம் ஒன்றை பாகிஸ்தான் கடற்படை ஆரம்பித்திருப்பதாகவும், மேலதிக மீட்புப் படகுகள், மீட்புக் குழுக்களும் கொழும்புக்கு அனுப்பப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தக் கப்பலில் இரு தேடுதல் ஹெலிகள் மற்றும் ஒரு மீட்பு ஹெலிகொப்டர் இருப்பதாகவும், 3 அதிகாரிகளும் 50 மரைன் படையினரும் பணிபுரிவர் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# விசேட நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் தேசத்தை கட்டியெழுப்ப அதிகாரசபை!

சுனாமி கடற்பேரழிவால் அழிந்து போன நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில், அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்தவர்களையும், உள்ளடக்கிய மூன்று உயர்மட்டச் செயற்பாட்டுக் குழுக்கள் ஜனாதிபதி சந்திரிகாவால் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடி அமைக்கப்பட்டுள்ள இந்தச் செயற்பாட்டுக் குழுக்களின் அங்கத்தவர்களிடம்- உயிர்களையும், உடமைகளையும் பாதுகாத்து அவர்களுக்கு உதவிகளை வழங்குவதோடு மறுசீரமைப்புப் பணிகளை விரைவுபடுத்தல், சட்டத்தை விரைவுபடுத்தல், சட்டத்தையும், சமாதானத்தையும் பாதுகாத்தல் ஆகிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக அமைக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களைப் பின்பற்றி வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உதவிகளை வழங்குதல் உட்பட அனைத்துத் தொடர்புகளும் திறைசேரிச் செயலாளர் மற்றும் வெளிநாட்டுச் செயலாளர்கள் மூலம் செயற்படுத்தப்படும் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (தே)

# பிரிட்டன் பத்திரிகையாளரும் சுனாமியில் சிக்கி உயிரிழப்பு!

இலங்கையில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினால் பிரிட்டனின் பிரபல ஊடகவியலாளரான றொபேட் வைமன்றும் உயிரிழந்துள்ளமை தற்போது தெரியவந்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி இவர் காலி கடற்கரையில் தனது ஜப்பான் மனைவி மினாகோவுடன் நின்றிருந்தவேளையே கடற் கொந்தளிப்பு ஏற்பட்டதாகவும் அதற்குள் இவர் சிக்கி உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும் இவரது மனைவி அதிஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளார்.

கடற்கொந்தளிப்பின் பின்னர் வைமன்ரின் உயிரற்ற உடலை அவரது மனைவி அடையாளம் காட்டினார்.

உயிரிழந்த வைமன்ற் ரஷ்ய உளவாளியான றிச்சட் சோஜி என்பவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதி புத்தகமாக வெளியிட்டார். அத்துடன் 'ரோக்கியோ றிங்' எனும் புத்தகமும் இவரால் எழுதப்பட்டு 1996 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

1974 ஆம் ஆண்டு முதல் ஆசியாவிலிருந்து காடியன், சண்டே ரைம்ஸ், டெய்லி ரெலிகிறாப், மற்றும் ரைம்ஸ் பத்திரிகைகளுக்கு இவர் செய்தியாளராக பணிபுரிந்து வருகிறார்.

# சுனாமி கடற்கொந்தளிப்பால் — பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்கா அனுதாபம்!



(கொழும்பு)

அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு கடந்த திங்கட்கிழமை விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி புஷ் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான கிளின்ரன், ஜோர்ஜ் புஷ், முதல் பெண்மணி லோரா புஷ் ஆகியோர் கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களை இலங்கைத் தூதுவர் தேவிந்த சுபசிங்கவிடம் தெரிவித்தனர்.

இதிலும் ஜனாதிபதி புஷ் தனிப்பட்ட முறையில், தனதும், தனது நாட்டினதும் ஆழ்ந்த அனுதாபங்களை இலங்கைத் தூதுவரிடம் தெரிவித்தார்.

அத்துடன் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்கா முழுமையான உதவிகளை வழங்குமெனவும் தெரிவித்தார்.

இதன்பின்னர் இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மீட்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் இலங்கைத் தூதுவருடன் இவர்கள் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் இவர்கள் இலங்கைத் தூதரகத்திலிருந்த அனுதாபப் புத்தகத்தில் கையெழுத்திட்டனர்.

# சிறுவர்களைப் பாதுகாக்க விசேட செயற்திட்டம்!

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பாதுகாக்க விசேட செயற்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் மாநாட்டிலேயே அவர் இதைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கீழ் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பராமரிப்பவர்களுக்குக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்திவருகின்றது எனவும் அவர் தெரிவித்தார். (தே)

## காலி துறைமுகத்தை

# இந்திய கடற்படையினர் துப்புரவு செய்தனர்!

சுனாமி அனர்த்தத்தால் மிக மோசமாகச் சேதமடைந்த காலி துறைமுகத்தை இந்திய மீட்புப் படையினர் துப்புரவு செய்துவிட்டதாக இந்தியக் கடற்படை அறிவித்துள்ளது.

மிகவும் நெருக்கடியான நடவடிக்கையின் மூலம் காலி துறைமுகத்தில் மூழ்கியிருந்த கப்பல்கள் அகற்றப்பட்டு போக்குவரத்துப் பணிகளை ஆரம்பிக்கும் அளவுக்கு சீர்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இந்திய கடற்படையின் பேச்சாளர் கொமாண்டர் வினாய் கிறேக் தெரிவிக்கையில்-

பலத்த சிரமங்களின் மத்தியில் காலி துறைமுகத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட சர்வேக்ஷக் மற்றும் சுற்லெஜ் ஆகிய கப்பல்கள் தமது பணியை முடித்து நேற்று துறைமுகத்துக்குள் பிரவேசித்தன எனத் தெரிவித்தார்.

# தெல்லிப்பளை கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு

(உடுவில்)

கடறகொந்தளிப்பினால் அழிவுக்குட்பட்ட மக்களின் துயரத்தில் பங்கேற்பதற்கான மிக முக்கிய கூட்டம் நாளை காலை 11 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தெல்லிப்பளை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட சகல அதிபர்கள், ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கோட்டக் கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். (101)

# பாகிஸ்தானுடனான.......
# மூன்றாவது டெஸ்டையும் அவுஸ்ரேலியா கைப்பற்றியது




அவுஸ்ரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் சிட்னியில் இடம்பெற்ற மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியை அவுஸ்ரேலிய அணி 9 விக்கெட்டுக்களால் வென்றதன்மூலம், மூன்று டெஸ்ட் தொடரையும் முழுமையாகக் கைப்பற்றியது.

முன்னதாக மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணி நேற்று தனது ஆட்டத்தைத் தொடர்ந்தது.

யாசிர் ஹமீட் 40 மற்றும் யுனிஸ்கான் 5 ஓட்டங்களுடன் தமது ஆட்டத்தை ஆரம்பித்தனர். இவர்கள் இருவரும் விக்கெட் விழாமல் பாதுகாத்தவாறு தமது ஆட்டத்தை வெளிப்படுத்தியவேளையிலும் அணி 104 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் யாசிர் ஹமீட் 9 பவுண்டரிகளுடன் 63 ஓட்டங்களைப் பெற்ற வேளை, வோனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் யுனிஸ் கானுடன், யுகானா இணைந்தார். இவர்களும் நிதான ஆட்டத்தையே வெளிப்படுத்தினார். இருந்தபோதிலும் யுகானா 78 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் மெக்கிலின் சூழலில் போல்டானார்.

அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 164 ஆக இருந்தது. இதன்பின்னர் அசிம் கமல் இணைந்தார். ஆனால், அணி அதே ஓட்ட எண்ணிக்கையில் இருக்கும்போதே யுனிஸ்கான் 102 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 44 ஓட்டங்களைப் பெற்றநிலையில் வட்சனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறை



யில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து அசிம் கமலுடன் அப்ரிடி இணைந்தார். இவர்கள் சிறப்பாக விளையாடிக்கொண்டிருக்கையில் 52 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த அப்ரிடி ரன் அவுட்டானார்.

இதன்பின்னர் 'அசிம் கமல் நிலையாக நின்றபோதும், அவருடன் இணைய வந்தவர்கள் அனைவரும் குறைந்த ஓட்டங்களுடன் வெளியேறிக்கொண்டிருந்தனர். இதில் கம்ரன்



அக்மல் 4, நவீட் உல் ஹசன் 9 மற்றும் சொகைப் அக்தர் எவ்வித ஓட்டங்களும் பெறாமலேயே வோனின் பந்துவீச்சிலும், டனிஸ் கனேரியா ஓட்டமெதையும் பெறாமலேயே மெக்கிலின் பந்துவீச்சிலும் ஆட்டமிழந்தனர். இறுதியில் அசிம் கமலும் 143 பந்துகளில் 15 பவுண்டரிகளுடன் 87 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஜிலெஸ்பியின் பந்துவீச்சில், பொண்டிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் பாகிஸ்தான் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 325 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் ஷேன் வோன் 4, மெக்கில் 3, ஜிலெஸ்பி மற்றும் வட்சன் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து 61 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையுடன் லாங்கரும், ஹைடனும் களமிறங்கி அடித்து விளையாடினர். இதில் அணி 58 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 30 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 34 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் லாங்கர் - டனிஸ் கனேரியாவின் பந்தில் ஆட்டமிழந்தார். எனினும் அடுததுவந்த பொண்டிங் பவுண்டரி ஒன்றை அடித்ததன்மூலம் வெற்றி இலக்கைப் பெற்றனர். இதில் ஹைடன் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மூன்றாவது டெஸ்டில் ஆட்டநாயகனாக மெக்கில் தெரிவானார்.

## இந்திய கிரிக்கெட் அணி நியூஸிலாந்து செல்லாது?

இலங்கை அணி திடீரென நியூஸிலாந்து தொடரிலிருந்து விலகியதையடுத்து இந்திய அணி அங்கு சென்று விளையாடலாம் என்ற கருத்து நிலவிவந்தது.

ஆனால், இந்திய அணி பெரும்பாலும் நியூஸிலாந்தில் விளையாடச்செல்லாது என்று இந்திய கிரிக்கெட் சபைச் செயலர் எஸ்.கே. நாயர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

நியூஸிலாந்து கிரிக்கெட் சபையிடம் இருந்து அழைப்பு வந்துள்ளது உண்மைதான். ஆனால், அங்கு இந்திய வீரர்கள் செல்வதற்கு மிகச் சிறிய வாயப்பே உள்ளது. என்றாலும் அது குறித்து உறுதிசெய்யப்படவில்லை. ஓரிரு நாளில் தெரியவரும் எனத் தெரிவித்தார்.

சுனாமியால் இலங்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டதை அறிந்து நியூஸிலாந்தில் விளையாடிக்கொண்டிருந்த இலங்கை வீரர்கள் தொடரை ரத்துச்செய்துவிட்டு உடனடியாக நாடு திரும்பினர்.

இதனையடுத்து அந்த இடைப்பட்ட காலகட்டத்தில் ஓய்வில் இருக்கும் இந்திய அணியை அழைத்து நிலைமையை சமாளிப்போம் என நியூஸிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்திருந்தது.


## பாகிஸ்தான் அணியில் மீண்டும் அசார்!

அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள முக்கோண ஒரு நாள் போட்டித் தொடரில் பாகிஸ்தான் அணியுடன் மீண்டும் அசார் ம.்.முத் மற்றும் தௌவ்பிக் உமர் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவு, ஆகிய 3 நாடுகள் இடையேயான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அசார் ம.்.முத், தௌவ்பீக் உமர் ஆகியோர் அணியில் மீண்டும் இடம்பெற்றுள்ளனர். பாகிஸ்தான் அணி வருமாறு -

இன்ஸமாம் (கப்டன்), சல்மான் பட், தௌவ்பீக் உமர், யாசிர் ஹமீட், முகமது ஹபீஸ், யுகானா, யுனிஸ் கான், அப்ரிடி, அபதுல் ரசாக், அசார் ம.்.முத், கம்ரன் அக்மல், சொஹைப் அக்தர், நவீத் உல் ஹசன், முகமது கலீல், இப்திகார் அஞ்சும்.

# கிரிக்கெட் தரவரிசையில் ராவிட், மக்ரா முதலிடத்தில்





டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் ராவிட் தொடர்ந்து முதல இடத்தில் உள்ளார். சமீபகாலமாகத் துடுப்பாட்டத்தில் பிரகாசித்துவரும் கலிஸ் - மேற்கிந்தியத் தீவுகளின் லாராவை முந்தி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

பிரபல 'பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்' நிறுவனம் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது.

இதில் ராவிட் 882 புள்ளிகளுடன் முதல் இடத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் 162 ஓட்டங்களை எடுத்த கலிஸ் 856 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். கடந்த ஒக்ஸ்டிலிருந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடாத லாரா மூன்றாவது இடத்துக்குப் பின்தங்கினார்.

பந்து வீச்சாளர்கள் பட்டியலில் பெரிய மாற்றம் எதுவும் இல்லை. அவுஸ்ரேலியாவின் மக்ரா முதல் இடத்தில் உள்ளார். இரணடாவது இடத்தை முரளிதரன் பெறுகிறார்.

தரவரிசைப்பட்டியலில் முதல் 10 இடங் களை பெறும் வீரர்கள் வருமாறு.

ராவிட் (இந்தியா) - 882, கலிஸ் (தென்னாபிரிக்கா) 856, லாரா (மேற்கிந்திய தீவுகள்) 845, மார்டின் (அவுஸ்ரேலியா) 830, ஷேவாக் (இந்தியா) 808, பொண்டிங் (அவுஸ்ரேலியா) 795, சச்சின் (இந்தியா) 778, ஹைடன் (அவுஸ்ரேலியா) 778, லாங்கர் (அவுஸ்ரேலியா) 755, சங்கஹார (இலங்கை) 752.

**பந்துவீச்சு**

மக்ரா (அவுஸ்ரேலியா) 873, முரளிதரன் (இலங்கை) 850, அக்தர் (பாகிஸ்தான்) 835, ஹர்மிசன்(இங்கிலாந்து) 829, ஜிலெஸ்பி (அவுஸ்ரேலியா) 792, கும்ளே (இந்தியா) 780, வோன் (அவுஸ்ரேலியா) 752, என்ரினி (தெனணாபிரிக்கா) 713, வாஸ் (இலங்கை) 687.

## கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி!

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் நடத்தும் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கான விளையாட்டுப் போட்டி பின்வரும் நேர அட்டவணைப்படி மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

எல்லே - ஆண்கள் 8,9 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி - பெண்கள் 9 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு.

உதைபந்தாட்டம் - 10, 11, 12, 13, 17, 18, ஆகிய திகதிகளில் மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

துடுப்பாட்டம் - ஆண் 15, 16 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு

பெண் 16 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு.

வலைப்பந்தாட்டம் 21 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு

கரப்பந்தாட்டம் - ஆண் 22 ஆம் திகதி காலை 8.30.

பெண் 23 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு

கபடி ஆண் 24 ஆம் திகதி காலை 8.30, பெண் 24 ஆம் திகதி மாலை 3.30 மணி

போன்ற தினங்களில் நடைபெறும் என விளையாட்டு உத்தியோகஸ்தர் பா.பாஸ்கரன் தெரிவித்தார். (72)

# விளையாட்டு

## மூன்றாவது டெஸ்டில் வெற்றிபெற இங்கிலாந்துக்கு கடின இலக்கு!



(டேர்பன்)

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெறுவதற்கு 501 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.


இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 100 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டத்தைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி ஸ்கோர் 101 ஆக உயர்ந்தபோது அடுத்த விக்கெட் வீழ்த்தப்பட்டது.

23 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஜோன்ஸின் பந்துவீச்சில் ருடோல்ப் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் டிப்பென்னர் களமிறங்கினார்.

கலிஸ் - டிப்பென்னர் ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். ஸ்கோர் 184 ஆக உயர்ந்தபோது அடுத்த விக்கெட் வீழ்த்தப்பட்டது. 44 ஓட்டங்களுடன் டிப்பென்னர் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து தென்னாபிரிக்க அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து வீழ்ந்தன.

போயே - 4, அம்லா - 10, கலிஸ் - 66, டி.வில்லியர்ஸ் - 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பொலக் 3 ஓட்டங்களுடன் என்ரினி ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில் தென்னாபிரிக்க அணி 8 விக்கெட் இழப்புக்கு 222 ஓட்டங்களுடன் ஆட்டத்தை டிக்ளேர் செய்தது. இதையடுத்து



இங்கிலாந்து அணிக்கு 501 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இரண்டாவது இனிங்ஸில் பிளின்ரொப், ஜோன்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ஹர்மிசன், ஹொகாட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முதல் இனிங்ஸில் 163 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்து அணி வெற்றிபெறுவதற்கு 501 ஓட்டங்கள் இன்னும் பெறவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு ஒருங்கிணைப்புக்குழு அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

அரச சுகாதார திணைக்களத்தையும், தமிழீழ சுகாதார சேவையையும் ஒருங்கிணைத்து - பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் சுனாமி அனர்த்த சுகாதார ஒருங்கிணைப்பு குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் செயற்பாட்டாளர்களாக வைத்திய கலாநிதிகள் சந்திரசேகரர், சொலமன், பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை விரிவுரையாளர் வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமார் மற்றும் தமிழீழ சுகாதார சேவைகள் யாழ். மாவட்ட இணைப்பாளர் செ.குணாளன் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இந்தக் குழுவுக்கு ஆலோசகர்களாக பேராசிரியர் தயா சோமசுந்தரம், பேராசிரியர் என்.சிவராசா, யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் என்.ரவிராஜ் ஆகியோரும், நிறுவனங்களின் சார்பில் யுனிசெப் பிரதிநிதி சிறீஸ்கந்தராசாவும் இடம்பெறுகின்றனர்.

இந்தக் குழுவின் செயற்பாடுகளாக அனர்த்தகாலப் பகுதியில் செயற்படுத்தப்படுகின்ற சுகாதார மருத்துவ வசதிகளை கண்காணித்தல், சகல சுகாதார மருத்துவ நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துதல், அத்துடன் இணைநததாக பொதுமக்களின் சுகாதார மருத்துவ வசதிகளை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, ஒழுங்குபடுத்தி மீளக்குடியமரும் மக்களுக்கும், முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கும், உரிய சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன இருக்கும்.

எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில் பணியாற்றும், பணியாற்ற விரும்பும் சுகாதார சேவை நிறுவனங்கள் அனைத்தும் இந்தச் செயற குழு ஊடாக செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் செயற்குழுவின் தலைமைச் செயலகம் - நெல்லியடி வீதியில் உள்ள சுனாமி அனர்த்த நடவடிக்கை செயலகக் குழுவில் இடம்பெற்றுள்ளது.

### ஒன்றுகூடல் நிதியும் நிவாரண உதவிக்கு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு பிரதேசசபை ஊழியர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வுக்கென சேகரிக்கப்பட்ட நிதி மற்றும் வலி. தெற்கு பிரதேசசபை ஊழியர்களின் துயர்துடைப்பு நிதி என்பன ஒன்றாக சேர்க்கப்பட்டு சுமார் 75 ஆயிரம் ரூபாவுக்கு உதவிப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு புற்றளை மகா வித்தியாலய நலன்புரி நிலையத்தில் தங்கியிருப்போருக்கு வழங்கப்பட்டது.

வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வுக்கென ஏற்கனவே நிதி சேகரிக்கப்பட்டு பின்னர் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் நிகழ்வு ரத்துச்செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (101)

# நோர்வே தூதுவர் குடாநாட்டுக்கு விஜயம்

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்றுமுன்தினம் யாழ். குடாநாட்டுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிட்டார்.

நேற்று முன்தினம் காலை யாழ்.குடாநாட்டுக்கு வருகைதந்த நோர்வேத் தூதுவரும் அவரது செயலாளரும் யாழ் .செயலகத்தில் காலை 10.30 மணியளவில் அரச அதிபர் கே.கணேசைச் சந்தித்து யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தனர். இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்றது.

தொடர்ந்து யாழ்.குடாநாட்டில் சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சிக் கரையோரப் பகுதிகளை இவர்கள் சென்று பார்வையிட்டனர்.

இதன் பின்னர் நலன்புரி நிலையங்களுக்குச் சென்ற இவர்கள் - அங்கு தங்கியுள்ள மக்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டதுடன் அவர்களின் எதிர்கால புனரமைப்பு பணிகள் தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

## கால்நடை வளர்ப்போரின் கவனத்துக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நுளம்புப் பெருக்கத்தின் காரணத்தால் விலங்குகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

மாடுகளின் இரத்தத்தைக் குடிக்கும் நுளம்புகள் பின்னர் ஆடுகளில் இரத்தத்தைக் குடிக்க குத்தும்போது, ஒருவகை கிருமி ஆடுகளின் இரத்தத்தில் சென்று புழுக்களாக மாறி அவற்றின் முள்ளந்தண்டுகளை பாதிக்கச் செய்கின்றன.

இதனால் ஆடுகள் சோர்வாதம் எனப்படும் நோய்க்கு உட்படுகின்றன. கண் விழிகள் தொடர்ச்சியாக கட்டுப்பாடின்றி அசைதல், பின்னங்கால்கள் சோர்வடைதல், நடக்கும்போது தள்ளாடித் தள்ளாடி நடத்தல், ஆட்டின் ஒருபகுதி அல்லது முழுப்பகுதியும் சோர்வடைதல் போன்றன நோய்த் தாக்கத்துக்கான அறிகுறிகளாகும்.

இவ்வாறான அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக மிருக வைத்தியரை நாடி, முறையான சிகிச்சை அளிக்கப்படவேண்டுமென சுன்னாகம் கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (101)

# செயலணிக்குழுவின் செயலக தொலைபேசி இலக்கங்கள்!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மக்களின் நடவடிக்கைகளுக்கான செயலணிக்குழு செயலக தொலைபேசி இலக்கங்கள் ஊடாகத் தொடர்புகொண்டு, உதவிப் பொருட்களை வழங்குவதற்கு ஏதுவாக அதன் தொலைபேசி இலக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனிநபர் மற்றும் நிறுவனங்கள் உதவிப் பொருட்களை வழங்குவதற்கு ஏதுவாகவும், விபரங்களை அறிந்துகொள்வதற்காகவும் 0114618212 அலுவலகம் 0712501593, 0602213559 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு புதுக்காட்டு சந்தி செயலணிக்குழு அறிவித்துள்ளது. (17)



இலங்கை வங்கி மானிப்பாய் கிளையின் விரிவாக்க அலுவலகம் அண்மையில் சங்கானையில் திறந்துவைக்கப்பட்டபோது வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் உரையாற்றுவதையும், மாவட்ட முகாமையாளர்கள் ரீ.திருச்செல்வம், மானிப்பாய் கிளை முகாமையாளர் என்.ஜெயரட்ணம், செயற்பாட்டு முகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம் மற்றும் சி.நடராஜலிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (48)

# கனரக வாகன பற்றாக்குறையால் மீட்புப் பணிகளில் பெரும் தாமதம்!

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீட்புப் பணிகள், கனரக வாகனங்கள் பற்றாக்குறையால் தாமதம் அடைந்துள்ளதாக வடமராட்சி கிழக்கு மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான நீண்ட பிரதேசமாகையால்- 40 கி.மீ தூரமும், 1 கி.மீ அகலமும் கொண்ட இந்தப் பிரதேசத்தில் 2 புல்டோசரகள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. இது இந்தப் பிரதேசத்துக்குப் போதாமையால், மீட்புப் பணி தாமதமடைந்துள்ளது.

கட்டடங்கள் இடிபாடுகள் மற்றும் பெரிய மரங்கள் முறிந்தும், விழுந்தும் இருப்பதால், இதற்குள் சடலங்கள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

ஆகவே மீட்புப் பணியைத் துரிதப்படுத்தவேண்டியுள்ளதால் அரச சார்பற்ற நிறுவனங்கள் கனரக புல்டோசர்கள் தந்துதவினால் மீட்புப் பணியைத் துரிதமாகச் செயற்படுத்த முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (17)

### பாதிக்கப்பட்ட ஆசிரியருக்கு நிவாரண உதவி

சுனாமி அனர்த்தத்தால் குடும்ப அங்கத்தவர்களை இழந்த மற்றும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் 27 பேருக்கு இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் உடுப்பிட்டிக் கிளையினரால் அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த உதவி வழங்கும் நிகழ்வு சங்கத் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

### கோழிகளுக்கு அம்மை நோய்

(உடுவில்)

மழைகாலம் குறைந்து பனிக்காலம் ஆரம்பித்துள்ள இவ்வேளையில், கோழிகளுக்கு அம்மை நோய் ஏற்பட்டு இறக்கத் தொடங்கியுள்ளன.

கோழிகளுக்கு அம்மை நோய் ஏற்படாது தடுக்க முற்கூட்டியே இதற்கான தடுப்பு மருந்துகளை ஏற்றிக்கொள்வது நல்லது.

கோழிப்பண்ணை உரிமையாளர்களும், வீட்டில் கோழி வளர்ப்போரும் உடனடியாக தெல்லிப்பளை கால்நடை வைத்தியருடன் தொடர்பு கொள்ளுமாறு கால்நடை வைத்தியர் பி.மகாதேவன் அறிவித்துள்ளார். (101)

# நெடுந்தீவு உள்ளூர் பகுதிக்கான பயணிகள் பஸ் சேவை ஸ்தம்பிதம்

நெடுந்தீவு உள்ளூர் போக்குவரத்து சேவையில் ஈடுபடடு வந்த பஸ் கடந்த சில தினங்களாக சேவையில் ஈடுபடாமையால் நெடுந்தீவு மேற்கு பகுதி மக்கள் பெரும் போக்குவரத்து சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பயணிகள் படகு சேவையின் போது வைத்திய, நிர்வாக, வியாபாரம் என பலதரப்பட்ட தேவைகளுக்கென பயணிப்போர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸின் வில்லுத் தகடுகள் சேதமடைந்திருப்பதே சேவை நிறுத்தத்திற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக உரியவர்களுக்கு அறிவித்துள்ளபோதும், பொறியியற் பகுதியினர் இதுவரை வந்து திருத்தவேலைகளை மேற்கொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (113)

# நலன்புரி நிலையங்கள் இடம் மாற்றப்பட்டுள்ளன

சுனாமி அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து இருப்போர் சுமார் 30 நிலையங்களில் வடமராட்சிப் பகுதியில் தங்கியுள்ளனர். இவர்களை ஒருமுகப்படுத்தி வசதி வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையில் உடனடி மனிதாபிமான புனர்வாழ்வு நடவடிக்கைக்கான கருமபீடம் ஈடுபட்டு வருகிறது.

இதில் தொண்டமானாறுப் பகுதியிலிருந்து கற்கோவளப் பகுதிக்குட்பட்ட மக்கள் தற்காலிகமாக தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம், கெருடாவில் வித்தியாலயம், வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி, வல்வை மகளிர் மகா வித்தியாலயம், பொலிகண்டி பாலாவி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, சமரபாகு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா வித்தியாலயம், மேலை புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம், வட. இந்து மகளிர் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயம், அந்தோனியார் மற்றும் லூர்த்துமாதா கோவில்கள், கற்கோவள மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலைகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வலிகாமம் வடக்கிலிருந்து தற்போது இடம்பெயர்ந்திருப்போர் சுனாமி அலையால் பாதிக்கப்பட்டோரை திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயத்திலும், தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் தங்கவைக்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (12)

## நெடுந்தீவு கிராமிய வைத்தியசாலையில் வைத்தியர் இன்மையால் நோயாளர் சிரமம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிராமிய வைத்தியசாலையில் வைத்தியர் இன்மையால் கடந்த சில நாட்களாக நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதுவரைகாலமும் கடமையாற்றி வந்த வைத்தியர் இடமாற்றம் பெற்றுச் சென்றபோதும், புதிதாக நியமிக்கப்பட்டவர் இதுவரை பொறுப்பேற்காமையால் இந்தநிலை தொடர்வதாகத் தெரிகின்றது.

தற்போது சீரற்ற காலநிலை நிலவுவதால், பிரயாணம் செய்து வெளியிடங்களில் மருத்துவ சேவையைப் பெறுவதற்கு அச்சம்கொண்டு மக்கள் உள்ளூரிலேயே நின்று விடுகின்றனர்.

இந்த நிலையில் உள்ளூர் வைத்தியசாலையிலும் வைத்தியசேவை சீரற்றிருப்பதால் மக்கள் மத்தியில் பெரும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தீவுப்பகுதி சேவைக்கெனக் கட்டப்பட்ட அம்புலன்ஸ் படகு சிறு திருத்தம் காரணமாகச் சேவையில் ஈடுபடாமல், கடந்த இரு மாதங்களாகக் குறிகாட்டுவான் துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ளது. (113)

# கோப்பாய் வள நிலையத்தில் இலவச வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

2005 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான- கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான இலவச வகுப்புக்கள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அமைந்துள்ள வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

றீடோ நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்ற இந்த வகுப்பில் மேற்படி மூன்று பாடங்களிலும் மீத்திறன் குறைந்த மாணவர்கள் உள்வாங்கப்படுவர்.

அத்துடன் போதிய ஆய்வுகூட வசதிகளற்ற பாடசாலைகளுக்கு நடமாடும் சேவை மூலம் கற்பித்தல் செயற்பாட்டை எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளதாகவும், ஆய்வுகூட வசதிகளற்ற பாடசாலைகள் நடமாடும் ஆய்வுகூட வசதியைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் நேர அட்டவணையை அனுப்பிவைக்குமாறும் றீடோ நிறுவனத்தின் யாழ். இணைப்பாளர் தெரிவித்தார். (44)

## இந்து குருமாரும் நிவாரணப்பணியில்

(உடுவில்)

சுனாமி கடல் அலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து சகல இந்துமத குருமாரும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்.

இதற்கென சுமார் ஒரு லட்சம் ரூபா பணம் மற்றும் உடுப்புக்கள், அரிசி, பாத்திரங்கள் என்பனவும் சேகரிக்கப்பட்டன.

இவற்றை விரைவில் உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் ப. மனோகரக்குருக்கள் தெரிவித்தார். (101)






# மரவள்ளிச் செடித் தெரிவில் அவதானம் தேவை

**போ**ர்த்துக்கீசர் காலப்பகுதியில் இலங்கையில், மரவள்ளி பயிரிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது அதிக விளைச்சலைத் தரக்கூடிய செடியாகும். கடல் மட்டத்திலிருந்து 1200 மீற்றர் உயரம் வரையான இடங்களில் உற்பத்தி செய்யலாம். வரட்சியான காலப்பகுதியிலும் வளரக்கூடியது. நன்றாக நீர் உறிஞ்சிக்கொள்ளும் மணல் கலந்த நிலத்தில் சிறப்பாக வளரும்.

மரவள்ளியைத் தெரிவுசெய்யும் போது, அதில் அடங்கியுள்ள 'ஹைட்ரஜன் சயனைட்டின்' அளவைப் பார்க்க வேண்டும். ஒரு கிலோ மரவள்ளியில் ஹைட்ரஜன் சயனைட்டின் அளவு 100 மில்லி கிராமுக்கு அதிகமாக இருப்பின், அந்த வகையைத் தெரிவுசெய்யக் கூடாது. அதற்குக் குறைவான வகையையே தெரிவுசெய்யவேண்டும்.

மாச்சத்து அதிகமுள்ள, நன்றாக அவியக்கூடிய தன்மையுடைய, 3 வகையான மரவள்ளிகள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. இவை அதிக விளைச்சலைத் தரக்கூடியவை. அதேநேரம், ஹைட்ரஜன் சயனைட்டின் அளவும் குறைவாகவே உள்ளடங்கியுள்ளது.

*அவையாவன -*

**எம்.யூ.51**

இந்தவகை மரவள்ளிச் செடியின் பயனை 8 - 10 மாதங்களில் பெறமுடியும். அண்ணளவாக ஒரு ஹெக்டேயருக்கு 35 - 40 தொன் விளைச்சலைப் பெறமுடியும்.

இந்தக் கிழங்கில் 45 - 50 மில்லிக்கிராம் ஹைட்ரஜன் சயனைட் அடங்கியுள்ளது. அளவான கிளைகள் கொண்டது.

**சீ.ஏ.ஆர்.ஐ 555**

இந்தவகை மரவள்ளிச் செடியின் பயனையும் 8 - 10 மாதங்களில் பெற்றுக் கொள்ள முடியும். சுவையுடைய இந்த மரவள்ளியில், ஒரு கிலோவில் 28 - 30 மில்லிகிராம் ஹைட்ரஜன் சயனைட் அடங்கியுள்ளது. சிறியளவிலேயே கிளைகள் விடக்கூடியது.

மூன்றாவது வகையில், ஒரு கிலோவில் 18 - 20 மில்லிகிராம் ஹைட்ரஜன் சயனைட் அடங்கியுள்ளது. 6 மாதத்தில் ஒரு ஹெக்டேயருக்கு 22 தொன் விளைச்சலும், 11 ஆவது மாதத்தில் 70 தொன்னுக்கு அதிகமான விளைச்சலையும் தரக்கூடியது. கிளைகள் நன்றாக விடக்கூடிய வகையாகும்.

**நடுகை**

20 - 25 சென்ரி மீற்றர் நீளமான, பச்சை நிறமற்ற, 4 - 6 தளிர் இலைகள் கொண்ட முற்றிய தண்டுகள் முளைக்க வைப்பதற்கு உகந்தது. உயரமாக அமைத்துக் கொண்ட நிலப்பகுதியில், தண்டின் 1/3 பங்கு மேலாக நிற்குமாறு முளைக்கவைக்கவேண்டும். கிளைகள் பிரியும் செடியானால், 100 x 100 சென்ரி மீற்றரும், கிளைகள் பிரியாத வகையாயின் 90 x 90 சென்ரி மீற்றர் இடைவெளி உகந்தது.

சாதாரணமாக மரவள்ளி முளைக்க வைத்து, 15 நாட்களுக்குப் பின்னரும், 3 மாதத்திலும், 5 ஆவது மாதத்திலும் தேவையான உரம் வழங்கவேண்டும்.

செடிகளுக்கு உரம் போடும்போது, மண்ணில் ஈரத்தன்மை இருக்கவேண்டும். அத்துடன் உரத்தைப் போடும்போது, செடியிலிருந்து 15 சென்ரிமீற்றர் தூரத்தில் செடியைச் சுற்றிப்போட வேண்டும்.

பயறு, உழுந்து, கௌபி, மரக்கறி போன்றவை உற்பத்திசெய்யும் இடங்களில், இடை உற்பத்தியாக மேற்கொள்ளலாம்.

தென்னம் பயிரை மேற்கொள்ளும் இடத்தில் - மரவள்ளியைப் பயிரிடும் போது, தென்னை மரத்தின் அடியிலிருந்து 2 மீற்றர் வட்டப் பிரதேசத்தில் பயிரிடக்கூடாது.

**சசி சந்திரகாசன்**

# யாழ்.குடாநாட்டில் – பண்ணையில் இறால் வளர்ப்புக்கான இடத்தேர்வு சம்பந்தமான கள ஆய்வு அறிக்கை

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**குருநகர்**

✪ குருநகரில் அமைந்துள்ள இறால் ஏற்றுமதி செய்யப்படும் இறால் வாடி – பார்வையிடப்பட்டது.

இங்கு இறால் தரம் பிரித்தல்முறை, இறால்களின் ஆண், பெண் இனங்காணும் முறை, இறால்களின் வகைகள், அவற்றின் நிறைகள் பற்றி நிபுணர்குழு விளக்கங்கள் பெறப்பட்டு, இறாலின் ஏற்றுமதி பற்றிய விடயங்களும் ஆராயப்பட்டன.

**வல்லைவெளி**

✪ கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வல்லைவெளிப் பாலத்துக்கு அருகாமையிலும், மண்டானின் ஆரம்பப் பகுதியாகவும் காணப்படும் வல்லைவெளிப்பிரதேசம் பார்வையிடப்பட்டது.

இங்கு இறால் வளர்ப்பதற்கு ஏற்ற சாதகமான காரணிகளான நிலவசதி, நீர்வசதி, போக்குவரத்து வசதிகள் போன்ற இதர வசதிகள் காணப்படுகின்றன. இருந்த போதிலும், இங்குள்ள நீர்ப்பிரதேசம் உவர்த்தன்மை அதிகரிக்கும் வாய்ப்புக் காணப்படுவதாகக் கூறப்பட்டது.

**மண்டான்**

✪ கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, மண்டானின் மற்றுமொரு பகுதி பார்வையிடப்பட்டது.

இங்கு இறால் வளர்ப்புக்கு ஏற்ற தேவையான நிலம், நீர், போக்குவரத்துப்போன்ற சாதகமான காரணிகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இறால் வளர்ப்புக்கு ஏற்ற பிரதேசமாகவும் தீர்மானிக்கப்பட்டது.

**தும்பளை கிழக்கு**

✪ யாழ்.குடாநாட்டின் பண்ணையில் இறால் வளர்க்கக்கூடிய பிரதேசங்களில் பார்வையிடப்பட்ட இறுதிப் பிரதேசம் தும்பளையாகும்.

இந்தப் பிரதேசம் வடமராட்சி கடற்தொழிலாளர்களின் சமாசத்தினரின் உதவியுடன் பார்வையிடப்பட்டது. இந்தப் பிரதேசம் பார்வையளவில் இறால் வளர்க்கக்கூடிய பிரதேசமாகக் காணப்பட்ட போதிலும், இறால் வளர்ப்பதற்குப் பொருத்தமற்ற பிரதேசம் என நிபுணர்குழுவால் தீர்மானிக்கப்பட்டது.

**காரணங்கள் –**

இந்தப் பிரதேச மண், இயற்கையான களிமண் தன்மையைக் கொண்டிருக்கவில்லை. இந்தப் பிரதேசம் கடலின் அடையலால் சேர்க்கப்பட்ட மணற்பாங்கான பிரதேசமாகும். எனவே மண்ணின் ஆழம், தரம் போன்றன பரிசோதனை மேற்கொண்ட பின்னரே முடிவு மேற்கொள்ளப்படவேண்டும்.

➟ இந்தப் பிரதேசம் பெருங் கடற்பரப்புக்கு மிகவும் அண்மையில் அமைந்த போதிலும், நீரைப் பெற்றுக்கொள்வது சிரமம். அத்துடன் கழிவுநீரை அகற்றப் போதிய வசதிகள் இல்லை. மேலும் வெள்ளப் பெருக்கு போன்ற அழிவுகளுக்கும் உள்ளாகலாம்.

➟ அருகில் பொருத்தமற்ற மணற்பாங்கான பிரதேசம் காணப்படுகிறது.

➟ சீரற்ற போக்குவரத்துக் காணப்படுகிறது.

➟ உயர் பாதுகாப்பு வலய பிரதேசத்துக்குட்பட்ட இடம் பாதுகாப்பு பிரச்சினை உள்ளது.

நிபுணர்குழு பார்வையிட்ட பிரதேசங்களில் உடனடியாக, தற்போது எந்தப் பிரச்சினையுமின்றி இறால் வளர்க்கக்கூடிய பிரதேசமாகக் காக்கைதீவுப் பிரதேசம், சிபார்சு செய்யப்பட்டது.

**நிபுணர் குழு விபரம்:-**

✷ பேராசிரியர் கா.சித்திரவடிவேலு
பணிப்பாளர்.
கடல்வள அபிவிருத்தி நிலையம் விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

✷ எஸ்.தயாபரன்
பணிப்பாளர்,
அக்வா சேர்விஸ் நிறுவனம் சிலாபம்.

✷ டினேஸ்சிகாமணி
நிபுணர்,
இறால்குஞ்சு தொழில்நுட்ப உற்பத்திநிறுவனம், இந்தியா.

✷ கலாநிதி எஸ்.அருளானந்தன்
பணிப்பாளர்,
நீருயிர்வள ஆராய்ச்சி நிறுவனம்.

(முற்றும்)

தொகுப்பு:– தா.டேவிற் –

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 120/= | 90/= | 100/= | 70/= | 100/= | 80/= | 70/= |
| வெண்டிக்காய் | 50/= | 60/= | 60/= | 40/= | 40/= | 60/= | 60/= |
| உருளைக்கிழங்கு | 90/= | 80/= | 80/= | 80/= | 80/=' | 100/= | 100/= |
| கத்தரிக்காய் | 80/= | 90/= | 100/= | 60/= | 70/= | 80/= | 80/= |
| பாகற்காய் | 110/= | 100/= | 100/= | 100/= | 100/= | 120/= | 100/= |
| கரட் | 100/= | 110/= | 120/= | 75/= | 80/= | 100/= | 110/= |
| பீற்றூட் | ✳ | ✳ | ✳ | 60/= | ✳ | ✳ | 70/= |
| முருங்கைக்காய் | ✳ | ✳ | ✳ | ✳ | ✳ | ✳ | ✳ |
| வெங்காயம் | 55/= | 65/= | 70/= | 60/= | 50/= | 60/= | 60/= |
| பச்சை மிளகாய் | 40/= | 40/= | 50/= | 25/= | 45/= | 60/= | 50/= |

தொழில்மலர்



# திடக்கழிவு மேலாண்மையும் நகர்ப்புறச் சுத்திகரிப்பும் - ஒரு பொருளாதார வருவாய்

இன்று நாடுகள் - பல தொழில் நுட்பப் புரட்சியால் பல்பரிமாண வளர்ச்சியைக் கண்டுள்ள அதேவேளை, எமது பிர தேசங்கள் குப்பைக் குன்றுகளாகக் காட்சி தருவது பெரும் வேதனைக்குரியதொரு விடயமாகும். இங்கு திடக் கழிவு எனக் குறிப்பிடப்படுவது - கிராமத்திலிருந்து நகரம் வரை அநாதரவாகக் கொட்டப்பட்டுக் கிடக்கும் குப்பைகளே ஆகும்.

இந்தக் குப்பைகள் பற்றிய பிரச்சினை– அன்று நகரத்திலிருந்து இன்று கிராமம் வரை பரந்து விட்டது. ஆரம்ப காலங்களில் நகரத்தில் காணப்பட்ட இட நெருக்கடி நிலையே அவர்களை வீதியில் குப்பைகளைக் கொட்டும் நிலையை ஊக்கப்படுத்தியது.

இதனால் வீதிகளில் செல்வோரும் பெரும் அசௌகரியங்களை சந்திக்கவே, உள்ளூராட்சி மன்றங்கள் தமது செலவில் குப்பைகளை அகற்றும் பணிகளைத் தொடர்ந்தன. ஆனால் காலப்போக்கில் நிதி, தொழிலாளர், இயந்திரம் என்பவற்றின் பற்றாக்குறையால் இடையிடையே முடங்கி முடங்கியே நடைபெற்றன.

இதன் காரணமாகவும், தொழில் நுட்ப வளர்ச்சியால் ஏற்பட்ட மக்காத திடக் கழிவுகளாலும் சூழல் மாசடைவது ஊக்கப்படுத்தப்பட்டதோடு, இதனால் தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டது. அத்தோடு திறந்த பொருளாதாரக் கொள்கையால், கிராமப்புறங் களும் நவீனத்துவமடையத் தொடங்கவே, பட்டி தொட்டிகள் எங்கும் இந்தப் பிரச்சினை தலைகாட்டத் தொடங்கியது.

ஆரம்பத்தில் சரியான முறையில் இனங்காணப்படாத இந்தப் பிரச்சினை, மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப வளர்ச்சிகண்டு, இன்று சுற்றுச் சூழலையே அச்சுறுத்தும் ஒரு பாரிய பிரச்சினையாக வளர்ச்சி கண்டுள்ளது.

எனவே நாம் இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காணவேண்டுமாயின் - இது தொடர்பான சிறந்த திட்டமிடல் முறையை மேற்கொள்ளுதல் வேண்டும். அதாவது இந்தத் திடக்கழிவுகளை வகைப்படுத்தி, மீள் பயன்பாடு செய்தல் வேண்டும்.

இதற்கு சிறந்த உதாரணமாக - அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில்

~ எஸ்.ஜெயா ~

முன்னணி வகிக்கும் நாடான இந்தியாவை எடுத்துக் கொள்ளலாம். அங்கு சிறந்த முறையில் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு, மீள் பயன்பாட்டுக்கு உபயோகிப்பதைக் காணலாம்.

இங்கு ஒரு கிலோ திடக்கழிவு (குப்பை) இந்திய ரூபாய்களின் 4 ரூபா படி கொள்வனவு செய்யப்படுகிறது. இதனால் வீடுகள், வீதிகள், நகரங்கள், கிராமங்கள் என்பன சுத்தமாக வைத்திருக்க ஊக்கப்படுத்தப்படுகிறது.

மேலும் கொள்வனவு செய்யப்படும் திடக்கழிவுகள் - மக்கக் கூடியவை, மக்காதவை என இரு வகைப்படுத்தியே கொள்வனவு செய்யப்படுகிறது. மக்காத திடக்கழிவுகளான - பிளாஸ்டிக், இரும்பு, செப்பு போன்ற உலோகங்கள் ஒரு பிரிவாக வகுக்கப்பட்டு, அவை தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. பின் அவை மீள் பயன்பாடுடைய பொருட்களாக உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு விடப்படுகிறது.

இதேபோல், மக்கக் கூடிய பொருட்களை ஒன்றாகச் சேர்த்து, அவற்றிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது. இவை பின்னர் பொதி செய்யப்பட்டு, ஏற்றுமதிக்காகவும் அனுப்பப்படுகிறது. இதனால் அந்த நாடு அந்நிய செலாவணியைக்கூடப் பெற்றுக்கொள்கிறது. இத்தகைய இயற்கை உரவகைகளால் மண்ணின் வளம் பாதுகாக்கப்படுவதோடு, நச்சுத்தன்மையற்ற உணவுப் பொருட்களையும் பெற முடிவதால், இந்த உரவகைகளுக்குப் பெரும் கிராக்கியும் ஏற்பட்டுள்ளது. இதேபோல் குப்பைகளிலிருந்து எரிவாயுவும் தயாரிக்கப்படுகிறது.

குப்பைகளை பொருளாதார வருவாய் ஈட்டும் ஒரு திடக்கழிவாக இந்தியா கருதுவதால், அதனை மக்களிடமிருந்து பணம் கொடுத்து கொள்வனவு செய்வதோடு, கணிசமான பொருளாதார வருவாயையும் ஈட்டுகிறது. இதன் மூலம் நாட்டைச் சுத்தமாக வைத்திருக்கவும் திட்டமிட்டுள்ளது.

ஆனால், எமது நாட்டிலோ சிறந்த திட்டமிடல் இன்மையால், எமது பிரதேசங்கள் குப்பை கூழங்களாக மாறிக் கொண்டிருக்கிறது. யாழ்.பிரதேசத்தை எடுத்துக் கொண்டால், குப்பைகளால் குவிந்துள்ள தெருக்களுக்கு ஓய்வு கொடுப்பது போல் அறிவிப்பு ஒன்று வெளியாகியுள்ளது. அதுதான் காக்கை தீவில் குப்பை கொட்டவென பாரியதொரு பிரதேசம் ஒதுக்கப்பட்டமையாகும்.

காலப்போக்கில் காக்கைதீவை ஒரு குப்பைக் கூடையாக மாற்றாது, அங்கே ஒரு பொருத்தமான தொழிற்சாலையை அமைத்து, சிறந்த முகா மைத்துவத்தின் கீழ் குப்பைகளை மீள் பயன்பாடு செய்தல் வேண்டும்.

இதன்மூலம் பொருளாதார வருவாய் கிடைப்பதுடன், குறிப்பிட்ட எண்ணிக்கையானோருக்கு இந்தத் துறை தொடர்பான புதிய தொழில்வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கலாம். இது சுத்தமான நகரையும், திடக் கழிவின் மீள் பயன்பாட்டையும் ஊக்கப்படுத்தும். இதனை தனியார் குறைந்த முதலீட்டுடன், கூடிய் இலாப மீட்டக் கூடிய ஒரு சுயதொழிலாகக் கூட மேற்கொள்ளலாம்.

பார்த்தீர்களா குப்பை கொட்ட கூலி கேட்ட காலம் போய், இப்போது கூலி கொடுத்து குப்பை வாங்கும் காலம் வந்துவிட்டது. ❋

# கமராக்கள் மட்டுமே ஒளிப்படங்களை உருவாக்குவதில்லை

உலகெங்கும் பல லட்சம் பேர் ஒளிப்படக்கல்லையைத் தொழிலாகக் கொண்டு முன்னேறிக் கொண்டு வருகிறார்கள். புகைப்படம் எடுத்துப் பணம் ஈட்டுவது என்பது -

கலை ஆர்வம் மிக்க, கடின உழைப்புக்குத் தயாராக இருக்கும் அனைவருக்கும் சாத்தியமே.

ஒளிப்படக்கலையின் நுணுக்கங்களை தொழில்நுட்பம் சார்ந்த, அறிவு மற்றும் கலை சார்ந்த, அறிவு என இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம்.

ஏனெனில், வெறும் தொழில் நுட்பத்தால் மட்டும் ஒரு சிறந்த ஒளிப்படத்தை உருவாக்க முடியாது. தொழில் நுட்பக்கலையாக உணரப்படும் ஒளிப்படம் எடுக்க கலைத்தன்மையுடன் கூடிய பார்வை தேவை.

காரணம் - ஒளிப்படக்கலை, ஓவியக்கலை, ஓவியக்கலையின் மறுபக்கமாகவே உணரப்படுகிறது. திறமை மிக்க ஒளிப்படக் கலைஞனுக்கு ஓவியக்கலையின் தாக்கமும், பாதிப்பும் கட்டாயம் இருக்கும்.

ஏனென்றால் ஒரு நல்ல ஒளிப்படத்தின் இலக்கணம் என்பது, ஒரு நல்ல ஓவியத்தின் இலக்கணத்தை முற்றும் சார்ந்தே இருக்கின்றது.

எனவேதான் கமெராவின் உதவியால் ஒளியின் துணைகொண்டு ஒளிப்படச் சுருளில் (Film roll) உருவாக்கப்படும் பிம்பங்களை ஒளிஓவியம் என்றும் சொல்வார்கள்.



பல நேரங்களில் கமெரா தூரிகைக்கும், ஒளி வண்ணக் கலவைக்கும் ஓவியத்தாள் ஒளிப்படக் சுருளுக்கும் ஒப்பிட்டுப் பேசப்படுகிறது.

எனவே தான் விலை உயர்ந்த கமராக்கள் இருந்தும், சிலரால் தரமான ஒளிப்படங்களை எடுக்க முடியாமல் போகிறது. காரணம் கமராக்கள் மட்டுமே ஒளிப்படங்களை உருவாக்குவது இல்லை. மாறாக, ஒளிப்படக் கலைஞனின் கலை சார்ந்த கற்பனையும், தொழில்நுட்ப அறிவும், மற்றும் சீர்மிகு கமரா கையாள்கையில் மட்டுமே ஓர் அரிய ஒளிப்படத்தை உருவாக்க முடியும்.

எனவே நாமும் ஒளிப்படக்கலையைத் தொழில் நுட்ப ரீதியாகவும், கலைநுட்ப ரீதியாகவும் பிரித்துப் படித்துப் புரிந்து கொள்வோம். ஒளிப்படக்கலையின் வரலாற்றை சற்றே பின்னோக்கிச் சென்று பார்ப்போமேயானால், இன்றைய ஒளிப்படக்கலை யின் தொழில்நுட்ப முன்னேற்றம் எம்மை ஒரு கணம் மிரள வைக்கும்.

200 ஆண்டுகளில் ஏற்பட்ட தொழில் நுட்ப மாற்றங்கள் ஒளப்படங்களின் தன்மையையே இன்று மாற்றி இருக்கிறது.

மாற்றங்கள் என்பது மனித நாகரீகத்தின் வளர்ச்சி. அதுஅவசியமும் கூட.

இந்த மாறுதல்களை ஏற்கமுடியாத கலைஞர்கள் - மாறிவரும் தொழில்நுட்ப வெள்ளத்தில் நீந்த முடியாமல் ஒதுங்கி விடுவார்கள் என்பதும் உண்மை. ✳

# உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு விடுதலைப்புலிகள் அவசர வேண்டுகோள்

(கிளிநொச்சி)

உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் விடுத்துள்ளனர்.

வடக்கு - கிழக்கில் சுனாமி கடற பூகம்பத்தால் ஏற்பட்ட அழிவால், இடம் பெயர்ந்தவர்களுக்கான மனிதாபிமான உதவிகள் தொடர்பாகவே உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு இந்த அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டதாவது -

முற்றுமுழுதாக மனிதாபிமானம் சார்ந்த விடயங்களில் மக்களைப் பிழையாக வழி நடத்தும் விதமான தவறான ஊடக அறிக்கைகளை நாம் காணக்கூடியதாக உள்ளது. ஊடகச் செய்திகளில் தவறுகளும், பக்கச்சார்புத் தன்மையும் இருப்பது, தற்பொழுது முன்னெடுக்கப்படும் மனிதாபிமான உதவிப் பணிகளுக்கான கூட்டு முயற்சிகளை பெரிதும் பாதிக்கும் என்பதால், அவல நிலையைக் கருத்திற்கொண்டு, செய்தி வெளியிடுவதில் அவதானமும் பொறுப்பும் இருக்க வேண்டும் என்று இதனூடாக வேண்டிக்கொள்கிறோம்.

ஆரம்ப காலகட்டத்தில், அநேகமான ஊடகவியலாளர்கள் கொழும்பை மையமாகக் கொண்டிருக்கும் வகையில் ஊடகக் கவனம் கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலேயே இருந்தது. இது எங்களால் விளங்கிக் கொள்ளக்கூடியது. தற்பொழுது ஊடகக்கவனம் வடக்குக் - கிழக்கின் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு திரும்பியிருக்கின்ற போதும் இன்றும் கூட செய்திகளில சில உண்மைத் தன்மையற்ற நிலை காணப்படுவது அதிர்ச்சி தருவதாக உள்ளது.

வடக்கில் புலிப் புரட்சியாளர் நலன்புரி நிலையத்துக்கு தீ வைத்தார்கள், தெற்கிலிருந்து வரும் உதவி விடுதலைப் புலிகளால் தடுக்கப்படுகிறது, ரஷ்ய வைத்தியர்கள் புலிகளின் பிரதேசத்துக்குச் செல்ல அனுமதி மறுப்பு போன்ற செய்திகள் துரதிஸ்டவசமானவை. இத்தகைய செய்திகள் தொடர்பாக பொருத்தமான தரப்புக்களிடமிருந்து, உதாரணத்துக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக குழு அல்லது சம்பந்தப்பட்ட தரப்புடன் உண்மைத் தன்மை பற்றி சரி பார்த்துக் கொள்வது உள்நோக்கத்துடன் செய்திகளை வழங்கும் மூலங்களில் தங்கியிருப்பதை விடச் சிறந்தது.

இந்த வகையில் மனிதாபிமானப் பணி தொடர்பான செய்திகளில் திரிபு ஏற்படாமல் இருப்பதை ஊடகங்களுக்கு வசதி செய்து கொடுக்கும் முகமாக, சில விடயங்களைத் தெளிவுபடுத்துவது பொருத்தமானது எனக் கருதுகிறோம்.

தனிநபரோ, நிறுவனங்களோ, மற்றும் எவராக இருப்பினும் அழிவுப் பிரதேசங்களுக்கு வந்து பார்வையிடுவதையும், நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களைச் சந்திப்பதையும், மாவட்ட மட்டத்தில் உள்வரும் எல்லா உதவிகளையும் பொறுப்பாக பதிவுக்குட்படுத்தி வெளிப்படைத் தன்மையுடன் வைத்திருப்பதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புக்களின் காத்திரத் தன்மையை அறிந்து கொள்வதற்கும் நாம் திறந்த மனதுடன் வரவேற்கின்றோம்.

மாவட்ட மட்டத்தில் அரச அதிபர், சர்வதேச உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள், மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இந்தக் கட்டமைப்பு, மிகச் செயற்றிறன் மிக்க ஒன்றென நிரூபிக்கப்பட்டுள்ளது. இங்கு விஜயம் செய்யும் சர்வதேச தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள், ஐ.நா. அமைப்பின் அதிகாரிகள் போன்றோர் இந்தக் கட்டமைப்பின் செயற்றிறனை வெகுவாகப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எங்கள் நிர்வாக பிரதேசத்துக்குள் மனிதாபிமானப் பணி தொடர்பாக எல்லோருக்கும் தங்குதடையற்ற அனுமதி உண்டு என்பதுடன், உதவிப் பொருட்களைக் கொண்டு வரும் வாகனங்கள் விடுதலைப் புலிகளால் திருப்பி அனுப்பப்படுகின்றன என்ற குற்றச்சாட்டில் எந்தவித உண்மையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். மனிதாபிமான உதவிக்கெனக் கொண்டு வரும் பொருட்கள் மீது வரியேதும் அறவிடப்படுவதில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

மனிதாபிமானப் பணி தொடர்பான விடயங்களில் விளக்கங்கள் தேவைப்படின் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்துடன தொடர்பு கொள்ளமுடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## உப அஞ்சல் அலுவலகம் இடமாற்றம்

பளை அஞ்சல் அலுவலகத்தின் கீழ் இயங்கும் தாளையடி, முள்ளியான் உப அஞ்சல் அலுவலக அஞ்சல் விநியோக எல்லைகளுக்குள் இருந்து, இடம் பெயர்ந்த மக்கள் தமக்குரிய கடிதங்களை பளை அஞ்சல் அலுவலகத்தில் பெறுவதற்குரிய ஒழுங்குகளை பளை அஞ்சல் அதிபர் பொன். கணபதிப்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை இடம்பெயர்ந்த அனைத்து உபஅஞ்சலதிபர்கள், ஊழியர்கள் பளை அஞ்சல் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (21)

## புனரமைக்கப்படாத நிலையில் வீதிகள்

கடந்த ஆண்டு தொடர்ந்து பெய்த மழையால் பூநகரி நெற்புலவு, தடுக்குறிச்சி, ஆலங்கேணி ஆகிய கிராமங்களின் வீதிகள் படுமோசமாக சேதமுற்றுக் காணப்படுகின்றன. இதனால் இந்தப பகுதி மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை, இந்தப்பகுதியில் இதுவரை வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை. இதை சம்பந்தப்பட்டவர்கள் கருத்திற் கொள்ளவேண்டுமென, இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## உவர்நீர் தடுப்பு அணை உடைப்பு

கடந்த வருடம் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட பூநகரி செல்லையா உவர்நீர் தடுப்பு அணை உடைப்பெடுத்துள்ளது.

இந்த உவர்நீ தடுப்பு அணை உரிய முறையில் புனரமைப்புச் செய்யப்படாமையால், கடந்த கால மழையால் உடைபெடுத்து 200 அடி நீளமளவில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இதனால், குடியிருப்புப் பகுதியில் கடல் நீர் உட்புகுந்துள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என, இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

## விபரங்கள் திரட்டப்படுகின்றன

வடமராட்சி கிழக்கிலிருந்து கடற்கொந்தளிப்பினால் இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்திலும் மற்றும் பளை பச்சிலைப்பள்ளி பிரதேச நலன்புரி நிலையங்களிலும் தங்கியுள்ள கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும குழந்தைகள் தொடர்பான விபரங்களை புதுக்காட்டு சந்தியில் அமைநதுள்ள செயலணிக் குழு சேகரித்து வருகின்றது.

முகாம்களில் தங்கியுள்ள கர்ப்பிணித்தாய்மார்கள், குழந்தைகளின் போஷாக்கின்மை, வைத்திய தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டே இந்தவிபரங்கள் சேகரிக்கப்படுவதாக செயலணிக்குழு அலுவலகம் தெரிவித்துள்ளது. (17)



கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் பலத்த காயத்திற்குள்ளான ஒருவருக்கு விடுதலைப்புலிகளின் படையணியினர் உதவுவதைப் படத்தில் காணலாம்.



கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு மயானமாகக் காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பகுதியைப் படத்தில் காணலாம்.

# வவுனியா புனர்வாழ்வுக் கழகத்தால் 34 லொறிகளில் நிவாரணப் பொருட்கள்

கடற்கொந்தளிப்பால் வடக்கு - கிழக்கு பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு 34 லொறிகளில் நிவாரணப் பொருட்களை அனுப்பியிருப்பதாக வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கிளையினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிவாரணப் பொருட்களைச் சேகரித்து வருகின்றது.

இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 9 லொறிகளிலும், அம்பாறை மாவட்டத்துக்கு 9 லொறிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 8 லொறிகளிலும், திருகோணமலை மாவட்டத்துக்கு 4 லொறிகளிலும், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 3 லொறிகளிலும், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 1 லொறியிலும் நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளாகியவர்களுக்கு வவுனியாவில் இருந்து சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கிடுகுகள் அனுப்பிவைக்கப்படவுள்ளன. வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் குமரகுலசிங்கம் இதைத் தெரிவித்தார்.

இதைவிட வவுனியா பலநோக்குக கூட்டுறவுச் சங்கத்தால் ஒரு லட்சம் ரூபா பணமாக நிவாரண நிதிக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டதுடன், 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அரிசியை நிவாரணத்துக்காக வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## நிவாரண அட்டை விநியோகம்

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான நிவாரண அட்டைகள், பளை மத்திய கல்லூரியில் கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் அந்தப் பகுதிக் கிராம அலுவலர்களால் வழங்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நிவாரண அட்டைகளை அந்தந்த நலன்புரி நிலையங்களில் வைத்தே வழங்குவதற்கான ஒழுங்குகளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

இடம்பெயர்ந்து நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ள மக்களும் கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு நிவாரண அட்டைகளைப் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (21)

## உதவுத்தொகை

பளைப் பிரதேசத்தின் வலுவிழந்த குடும்பங்களிலுள்ள மாணவர்களின் கல்வியை விருத்தி செய்யும் நோக்கில வெண்புறா நிறுவனத்தால் நிதி வைப்பிடப்பட்டுள்ளன.

இந்த நிறுவனத்தால் யுனிசெப் நிதியுதவியுடன் வலுவற்ற குடும்பங்களிலுள்ள மாணவர்களின் கல்வியை விருத்தி செய்யும் நோக்கில் 3 ஆயிரம ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

# வவுனியா அரசாங்க அதிபராக சண்முகம் பதவியேற்றுள்ளார்

வவுனியா மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக எஸ்.சண்முகம் பதவியேற்றுள்ளார்.

இந்த மாவட்டத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக அரசாங்க அதிபராக இருந்த கே.கணேஸ் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்று சென்றதையடுத்தே இவர் இந்தப் பதவியை ஏற்றுள்ளார்.

இதேவேளை யாழ். மாவட்ட அரசாங்க அதிப ராக இருந்த எஸ்.பத்மநாதன் உலக வங்கியினால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் புனரமைக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஆயிரம் வீடுகள் வடக்கு - கிழக்கில் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த 20 வருடகால யுத்தம் காரணமாக நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கே இந்த வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் கிழக்கு மாகாணத்தில் கட்டப்பட்ட பல வீடுகள் கடற்கொந்தளிப்பால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜனவரி - 06

**1838:-** இங்கிலாந்தில் பர்மிங்ஹாமுக்கும், லிவர்பூலுக்கும் இடையே ஓடும் ரயிலில் முதன் முதலாக ரயில்வே தபால் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது.

**1752:-** இந்தவருடம் வரை கிறிஸ்மஸ் தினம் இன்றைய தினத்தில்தான் கொண்டாடப்பட்டு வந்தது. ஆர்மீனியர்கள் இன்றும் கிறிஸ்மஸ் தினத்தை இன்றுதான் கொண்டாடி வருகின்றனர்.

**●:-** கண்பார்வை இழந்தவர்கள் எழுதப், படிக்கத் தெரிந்து கொள்வதற்கான "ரபிகிராபி" என்ற புள்ளி வடிவ எழுத்துமுறையை உருவாக்கிய லூயிஸ் பிரெயிலி இன்று மரணமடைந்தார்.

**1918:-** பின்லாந்து விடுதலையை ஜேர்மனி அங்கீகாரம் செய்தது.

**1939:-** பெர்லின் கெமிக்கல் இன்ஸ்ட்டிடியூட்டைச் சேர்ந்த பேராசிரியர் நட்டோஹான் அணுவைப் பிளக்கமுடியும் என்று அறிவித்தார்.

**1959:-** உலகின் முதல் செயற்கைக் கோள் ஏவப்பட்டது. ரஸ்யாவின் "காஸ்மிக் ரொக்கட்" என்றழைக்கப்பட்ட இந்தச் செயற்கைக் கோள், பூமியை விட்டு எட்டு லட்சம் கிலோமீற்றர் தூரம் மேலேசென்று சுற்றுப்பாதையை அடைந்ததாக ரஷ்ய அறிவியல் அக்கடமி அறிவித்தது.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை.
- திருக்குறள்

# நமது நோக்கு

## நிவாரணப் பணிகள் தொடர்பான ஜனாதிபதியின் தந்திரோபாயங்கள்!

எப்போதுமே ஜனாதிபதி சந்திரிகா தன்னை ஒரு மிகச் சிறந்த ராஜதந்திர நுணுக்கத்திறன் மிக்க - பேரினவாத சிந்தனையிலிருந்து இம்மி அளவேனும் பிசகாத - அரசியல்வாதி என்பதை வலுப்படுத்தும் வகையில் தனது நகர்வுகளை திட்டமிடுவது வழக்கமாகும்.

அவரின் அரசியல் வியூகங்கள் எப்போதுமே தனது எதிரணியினரை அல்லது எதிராளியை இலக்குவைத்துத் தாக்கும் உத்தியில் வகுக்கப்பட்டதாகவே இருக்கும் என்பது உண்மையாகும்.

1994 இல், அழுத கண்களும் சிந்திய மூக்குமாக அவர் முதல் முதல் நேரடி அரசியலில் காலடி எடுத்துவைத்தபோது தன்னை ஒரு சமாதானத் தேவதையாகவே உலகிற்கு இனங்காட்ட முயன்றார்.

ஓராண்டுக்குள் - அதாவது 1995 இற்குள் தான் பண்டாரநாயக்க பரம்பரையின் அரசியல் வாரிசு என்பதை நிரூபிக்கும் வகையில் பௌத்த சிங்கள பேரினவாதிகளின் சிந்தனைத் தடத்தை மேலும் மூர்க்கமாகப் பின்பற்றும் ஒருவர் என்பதை மிகத் தெளிவாக நிரூபித்துக் காட்டினார்.

யாழ்.குடாநாட்டின் மீதான படையெடுப்புக்கான அவரது சூரியக்கதிர் இராணுவ நடடிக்கை அவரின் சமாதானப் புறா வேஷத்தை முற்றாகக் கலைத்ததுடன், அவருக்குள் மறைந்திருந்த இனவெறிக் கழுகின் சுயத்தன்மையையும் வெளிப்படுத்தியது.

சூரியக்கதிர் நடவடிக்கையில் உத்வேகம் கொண்ட அவரது தமிழின எதிர்ப்பு மற்றும் அழிப்பு நடவடிக்கைக்ள் ஓயாத அலைகளால் ஒடுக்கப்பட்டு சிதைக்கப்படும் வரை ஒரு ஏழாணடு காலம் தமிழர் வாழ்வை எவ்வாறு ரணகளமாக்கி நிர்மூலம் செய்தது என்பது விபரிக்கவேண்டிய ஒன்றல்ல.

அதன்பின்னர் ஏற்பட்ட அரசியல் மாறுதலும் அதையொட்டி உருவான சமாதானச் சூழலும் ஜனாதிபதியை சற்று நிலைகுலைய வைத்தாலும் அபரிதமான சர்வாதிகாரப் பலம்கொண்ட அவரது பதவியின் வலிமையைப் பயன்படுத்தி அவர் மீண்டும் அரசியல் மாற்றமொன்றை தனக்குச் சாதகமானதாக ஏற்படுத்திக் கொண்டதும் சில மாதங்களின் முன்னர் நடந்தேறிய நிகழ்வேயாகும்.

அதன்பின்னர் சமாதான சூழலுக்கு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியும் மீண்டும் போர் முனைப்புடன் அரசு நகர்வுகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ள சூழலும் மக்கள் மத்தியில் பெரும் பீதியை உருவாக்கியுள்ள சூழலில் சுனாமி கடல்கோள் ஏற்படுத்திய அனர்த்தம் ஜனாதிபதியை தனது வியூகங்களை மீண்டும் ஒரு தந்திரோபாய நோக்கில் மாற்றவைத்துள்ளது.

ஏற்கனவே பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையை எட்டிவிட்டுள்ள நிலையில் - அரச இயக்க வெளிநாட்டுக் கடன்களிலேயே தங்கிநிற்கும் அவலத்தைச் சந்திக்கும் சூழலை எதிர்கொண்டு திணறும் ஜனாதிபதி, கடனுக்கு நிபந்தனையாக சமாதானத்தை சர்வதேசம் விதித்துள்ளதை ஏற்கமுடியாத நிலையில் சுனாமி அவருக்கு கைகொடுத்துள்ளது என்றே கூறவேண்டும்.

சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலம் வெளிநாட்டுக் கடனைப் பெற மனமற்ற நிலையில், பல்வேறு தந்திரோபயங்களைக் கையாண்டும், கடன் வழங்கும் நாடுகளின் மனதை மாற்றமுடியாத நிலையில் சுனாமி கடல்கோளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக அள்ளிக்கொடுக்கும் சர்வதேச உதவிகள் (நிதியுதவி உட்பட) - ஜனாதிபதிக்கு புது நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரணப் பணிகளை விடுதலைப் புலிகளுடன் இணைந்து மேற்கொள்ளத் தயார் என்று பிரசாரத்தை மேற்கொண்டவண்ணம் உலகநாடுகளின் அனுதாப நிதியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய அளவு பெற்றுக்கொள்ள முயல்வதுடன், இந்தச் சூழலைப் பயன்படுத்தி மீண்டும் ஒரு மாறுப்பட்ட அரசியல் - இராணுவ நெருக்கடி நிலையை ஏற்படுத்தி சமாதான சூழலுக்கு அச்சுறுத்தலை உண்டு பண்ண முயல்கிறார் என்றே கூறவேண்டும்.

நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவென அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன், பாகிஸ்தான், பங்களாதேஷ்... என பல்வேறு நாடுகளின் கடற்படைப் போர்க்கப்பல்களையும் படையினரையும் இலங்கையில் நிலைகொள்ள அனுமதித்தன் மூலம் இலங்கையின் இறமைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் சூழலை ஜனாதிபதி உருவாக்கியுள்ளார் என்பதே அரசியல் - இராணுவ ஆய்வாளர்களின் வெளிப்படையான கருத்தாகியுள்ளது.

இந்த அந்நிய இராணுவச் சூழல் - இலங்கையில் எத்தகைய குழப்பங்களை ஏற்படுத்தப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.


இது ஒருபுறமிருக்க உள்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு மற்றும் நிவாரணப் பணிகளை முப்படைகளிடம் ஒப்படைப்பதாகவும் படைத்தரப்பு நிர்வாகத்தின் கீழேயே அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி அவசர உத்தரவொன்றை வெளியிட்டுள்ளமையானது மேலும் அச்சத்தையும் சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ளப் போவதாகக் கூறிய சில நாட்களுள் முப்படையினரிடம் அப்பணியை ஒப்படைப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளமையானது விடுதலைப் புலிகளை ஓரங்கட்டும் ஒரு மூலோபாயம்தான் என்றே உணரமுடிகிறது.

அவரின் இந்த முடிவானது அப்பம் பகிர்ந்து கொடுக்க முன்வந்த குரங்கின் கதையையே நினைவூட்டுவதாக உள்ளது.

இதேவேளை நிவாரண மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கான சர்வதேச உதவிகளை பகிர்ந்தளிக்கும் கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகள் தரப்பின் நியாயமான கோரிக்கையை நோர்வே தரப்பினர் கவனமாக பரிசீலிப்பது பாதிக்கப்பட்ட மக்கள் ஏமாற்றப்படாமல் இருக்கவும் நிவாரணப் பணிகள் நியாயமாக நடக்கவும் உதவும் என்றே கூறவேண்டும்.

## நாடும் நடப்பும்




## செய்திகளினூடாகஒரு பார்வை...

# ஜனாதிபதி - ஜே.வி.பி மற்றும் சிங்களத் தலைமைகளின்

# சமாதான நகர்வுகளில் சந்தேகம் கொள்ளும் சர்வதேச சமூகம்

நேரத்துக்கு நேரம் பொறுப்பற்ற முறையில் கூசாமல் பொய்களும், புரட்டுக்களும் பேசுவதில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 'புகழ்' பெற்றவர் என்பது நாம் அறிந்த விடயம் மாத்திரமல்ல, இப்போது உலகறிந்த விடயமாகவும் வெளிப்பட்டுவருகிறது.

சமாதானம், சமாதானம் என்று அவர் வெறும் பல்லவி பாடி, தன்னை ஒரு வெண்புறாவாகக் காட்டிப் பறக்க, அவரின் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியோ கனல் பறக்க சமாதான முயற்சிக்கும், சமாதான அனுசரணையாளரான நோர்வே பிரதிநிதிக்கும் எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகிறது. இவைகளுக்கு மேலாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிராட்ஸ்கர்மூலம் நோர்வே - புலிகளுக்குப் பலவழிகளில் உதவிவருகிறது என்று கண்டனக் கணையாக ஒரு கடிதத்தை எழுதினார்.

ஜே.வி.பியின் ஆதரவுடன் தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டிருப்பதற்காக அந்தக் கட்சி சமாதான முயற்சிகளுக்கு எதிராக என்னதான் நட்டா முட்டித்தனம் செய்தாலும், அதை மூடி மறைத்து சளாப்பல் கதை அளப்பதில் இப்போது ஜனாதிபதி தோல்வியையும், அவமானத்தையும் சந்தித்துத் திணறிவருகிறார்.

இத்தகைய ஒருநிலை, கடந்த நவம்பர் கடைசிப் பகுதியில் ஜப்பானியத் தூதுவர் அக்கியோசுடா, அமெரிக்கத் தூதுவர் ஜெவ்றே லண்ஸ்றெட், நெதர்லாந்துத் தூதுவர் சுகன் பிளாங்ஹார்ட் ஆகியோர் அவரைச் சந்தித்தபோது அவருக்கு ஏற்பட்டது.

சந்திரிகாவின் சமாதான இசையும், ஜே.வி.பியின் சமாதானத்துக்கு எதிரான முழக்கமும் தொடர்வதால், இந்தத் தூதுவர்கள் அந்தக் குழப்பங்களிலிருந்து தெளிவு பெறுவதற்காகவே சந்திரிகாவைச் சந்தித்தார்கள்.

இந்தச் சந்திப்புப்பற்றி 'சண்டே லீடர்' வாரஇதழ் ஒரு கட்டுரையை விபரமாக வெளியிட்டுள்ளது. அதன் சில பகுதிகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"சமாதான முயற்சிகள் குறித்து உங்கள் அரசாங்கத்தின் தெளிவான கருத்தைச் சொல்லுங்கள்" என்று தூதுவர்கள் சந்திரிகாவைக் கேட்டார்கள்.

சந்திரிகா - தனது வழமையான சிரிப்பை அப்போது வரவழைத்துக்கொண்டு சமாதானத்துக்கு அரசியல் ரீதியாகவும், எனது தனிப்பட்ட முறையிலும் என்னையே அர்ப்பணித்துள்ளேன். நானே நோர்வேயை அனுசரணையாளராக அழைத்தேன். விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கு இணங்க மறுத்தார்கள். எதிர்க்கட்சியும் எனக்கு ஒத்துழைப்புத் தரவில்லை என்றெல்லாம் மூச்சுவிடாமல் பேசி, யூ.என்.பி இப்போது சமாதானத்துக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறியதையும் நிராகரித்தார்.

தூதுவர்கள் இதையெல்லாம் அதிக கவனத்தில் எடுக்காது, "நீங்களே சமாதானம் பற்றிச் சொல்கிறீர்கள். உங்களது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி சமாதானத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறதே" என்று கேட்டார்கள்.

ஜே.வி.பியின் கருத்து அரசின் கருத்தல்ல. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்திய ஜே.வி.பியினர் எவருமே நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லர். நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிராட்ஸ்கருக்குக் கடிதம் எழுதிய ரில்வின் சில்வா கூட, நாடாளுமன்ற உறுப்பினர் அல்லர் என்றார் சந்திரிகா.

உடனே தூதுவர்கள் விமல் வீரவன்ச நோர்வேத் தூதரகத்தின் முன்பும், வேறுசில இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களையும், கண்டனக் கூட்டங்களையும் நடத்தினாரே என்று கேட்டபோது, சந்திரிகா - அவர் நாடாளுமன்ற உறுப்பினர் தானே மந்திரி அல்லவே என்றார். இதை அந்தப் பத்திரிகை, சந்திரிகா ஐந்து வயதுப் பாலருக்கு தான் பிரசங்கம் செய்வதாக நினைத்துக்கொண்டு இப்படியெல்லாம் பதிலளித்தார் என்று கிண்டல் செய்துள்ளதுடன், தூதுவர்களது ஆய்வறிவையும் தனது அறியாமையால் அவமதித்தார் என்றும் கண்டித்துள்ளது.



ரில்வின் சில்வா அரசாங்கத்தை, தாங்கிப் பிடிக்கும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர். இலங்கை சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கடந்த தேர்தலின் போது செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அவர் - ஜே.வி.பியின் சார்பிலும், இலங்கை சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும் கையெழுத்திட்டார்கள்.

இத்தகைய பொறுப்புவாய்ந்த ஜே.வி.பியின் பொதுச் செயலாளரை சந்திரிகா மிகச் சுலபமாகத் தூக்கியெறிந்து, ஒரு புரட்டுப் புரட்டிவிட்டார் என்று அந்தப் பத்திரிகை ஒரு குதத்தல் போட்டிருக்கிறது.

'சண்டே லீடர்' சுட்டிக்காட்டியவற்றைவிட இங்கு இன்னொரு விடயத்தைச் சிந்தித்துப் பார்ப்போம்.

நோர்வே தூதுவர் அலுவலகத்தின் முன்பும், வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டம் செய்த ஜே.வி.பியினரும், நோர்வே தூதுவருக்குக் கடிதம் எழுதிய பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவும், நாடாளுமன்ற உறுப்பினர் அல்லர் என்று சந்திரிகா முறித்துக் கதைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் ஆர்ப்பாட்டத்தைச் சுட்டிக்காட்டியபோது அவர் நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சரல்லவே என்றார்! ஜே.வி.பியின் கடும் போக்காளர் லால்கந்த திஸாநாயக்க அமைச்சராக இருக்கிறார்.

அடிக்கடி சந்திரிகாவுடன் முரண்படுபவர். அவர் சமாதானத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு, அதை எடுத்துக் கூறினால், அவர் அமைச்சர்தானே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அல்லவே என்றும் சந்திரிகா கூசாமல் கூறிவிடுவார்!

குறித்த தூதுவர் சந்திப்பில் ஜனாதிபதி சந்திரிகா என்னதான் புரட்டு வார்த்தை ஜாலங்கள் செய்தும் தூதுவர்கள் மசியவில்லை. "சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அழுத்தமாகக் கூறியதோடு சமாதானம் என்பது வெறும் வார்த்தைகளில் மாத்திரமல்லாது சொல்வதைச் செய்வதிலேதான் தங்கியிருக்கிறது" என்று உறுதிபடக் கூறியதாகவும் 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

அந்தச் சந்திப்பின் பின்னர் தூதுவர்கள் வெளியிட்ட அறிக்கையில் அரசில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான ஜே.வி.பியின் செயற்பாடுகள் சமாதானம் பற்றியும், அதறகு நோர்வே அனுசரணையாளர்களின் பங்களிப்பு பற்றியும் ஜனாதிபதி கூறிவரும் கருத்துக்கு முழுக்க முழுக்க முரண்பாடாக இருப்பது எமக்கு ஆழ்ந்த கவலையையும் குழப்பத்தையும் அளிக்கின்றது. ஜனாதிபதி மீண்டும் சமாதானத்துக்காக எடுக்கும் முயற்சிகளுக்கு நாம் ஆதரவளிப்போம் என்று தொி வித்தனர்.

இவற்றையெல்லாம் நாம் தொகுத்துப் பார்க்கும்போது, இந்தத் தூதுவர்கள் மாத்திரமல்ல சர்வதேச சமூகமே ஜனாதிபதி, ஜே.வி.பி. மற்றும் சிங்கள அரசியல்வாதிகள் அனைவரது சொல்லையும், செயலையும் இப்போது நன்கு உணர்ந்து வருவதால், நீதியான ஒரு தீர்வு, பேச்சுவார்த்தை மூலம் எடடப்படவேண்டும் என்பதில் மிகவும் முனைப்பாகவும், உறுதியாகவும் அழுத்தம் கொடுக்கும் வகையில் அவர்கள் செயற்பட்டு வருகிறார்கள் என்பது தெரிகிறது.- **செஞ்சேவலோன் -**

பகுதி II — சாங்கர்



# காற்றே நீ எம் கதை கேளாயோ...! அலையே நீ எம் நிலை உணராயோ...!

**சுனாமி கடற் கொந்தளிப்புப் பேரழிவு அனர்த்தம் வடக்கு – கிழக்கு கரையோர மக்களுக்கு ஏற்படுத்திய தாக்கங்கள், அழிவுகள் பற்றிய நேரடிப் பார்வைப் பதிவுகளதும் அது குறித்த, உணர்வுப் பகிர்வுகளும்....**

மட்டு - அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒருபக்கம் கடலும், மறுபக்கம் வாவியுமாக மிகவும் ஒடுங்கிய தரையமைப்புக் காணபபடுகிறது. எனவே இந்த இடத்தில் மீள் குடியமர்வு என்பது குறித்து நாம் யோசித்தே முடிவெடுக்க வேண்டியுள்ளது.

இதற்கான திட்டங்களை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வன் மேற்கொண்டு வருவதாகத்தெரிகிறது.

இந்தப் பாரிய அனர்த்தத்தால் மட்டு - மாவட்டத்தில் ஒரு லட்சத்து முப்பதினாயிரம் குடும்பங்களில் கிட்டத்தட்ட அறுபத்தேழாயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாகக் கடற்கரையோரப் பிரதேசத்தில் கூடியளவு வீடுகள், கட்டடங்கள் இடிந்து, உருக் குலைந்து காணபபடுகின்றன. இதனால் புனரமைப்பதென்பது பாரிய வேலைத திட்டம். இந்த வேலைத் திட்டத்தை மனித வலுவை மட்டும் வைத்துக் கொண்டு செய்யமுடி யாது. நவீன உபகரணங்கள் டோசர், எக்ஸ்லேற்றர் போன்ற கனரக வாகனங்களைப் பயன்படுத்தியே இந்தப் பிரதேசங்களை புனரமைப் புச் செய்ய முடியும் எனக் குறிப்பிட்டார்.

X X X

02.01.2005 காலை ‘‘சாகாமம் வழியாக திருக்கோயில் போகலாம். தற்போது இடுப்பு வரை தண்ணீர் ஓடுகிறது. இன்னும் கொஞ்சம் வடிந்தால், மோட்டார் சைக்கிளை தூக்கிச் செல்லக் கூடியதாக இருக்கும்’ எனத் தெரிவித்தார்கள். அதன்படி இரு மணித்தியாலங்கள் செலல ஒரு போராளியுடன் திருக்கோவிலுக்கு புறப்பட்டேன்.

வழியில் தூரத்தே மலையில் ஒரு கோயில் தெரிந்தது. குன்றில் இருப்பதால் குமரன் கோயில்தான் என நினைத்து அப்பனே முருகா எனக் கும்பிட்டு விட்டு அந்தப் போராளியிடம் மேல் இருக்கிறது முருகன் கோயில் தானே? என்று கேட்டேன். ஓம், ஆனா இப்ப ஆமிதான் கிடக்கான் என்றார். அப்ப! பூசை நடக்கிறதில்லையோ? என்று கேட்டேன். ‘முழுசா அவன் தான் கிடக்கான், மலைக்குக் கீழையும் காம்ப் போட்டிருக்கிறான்’ என்றார். அப்ப நான் சாமி என்று நினைத்து ஆமியைத்தான் கும்பிட்டிருக்கிறேன். வேலுக்குப் பதிலாக துப்பாக்கியைக் கும்பிட்டிருக்கிறேன். கல் கண்டு தமிழ்வாணன் ‘துணிவே துணை’ என்று தனது இலச்சினையில் குறிப்பிடுவார். தமிழர்துப்பாக்கியே துணை என்று இருந்தபடியால் தான் தற்போது தலை நிமிர்ந்து நிற்கமுடிகிறது என்று நினைத்தவாறே பயணத்தைத் தொடர்ந்தேன். தொடர்ந்து அவருடனான உரையாடலில் அவரது இரு மருமக்கள் இந்த அனர்த்தத்தில் பலியானதாகவும் அவர்களில் ஒருவர் கோமாரியிலும், மற்றவர் கல்லாற்றிலும் உயிரிழந்ததாகவும் குறிப்பிட்டார். மட்டு - அமபாறை மாவட்டத்தில் உள்நுழையும் போது முதல் நபரே பாதிக்கப்பட்டவராகத் தான் இருந்தார்.

இந்தப் போராளி அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பனிடம் என்னைச் சேர்த்தார். அப்போது குயிலின்பன் உதவிப் பணிகள் சம்பந்தமாக ஒரு பெண் போராளியுடன் உரையாடிக் கொண்டிருந்தார். பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் இடம் பெயர்ந்தோர் முகாம்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடரபாக கிராமங்கிராமமாக விடுக்கப்பட வேண்டிய அறிவுறுத்தல்களைக் காட்டிவிட்டு இவற்றை ஒலிபரப்ப வாகன வசதி செய்து தருமாறு கேட்டார். அதற்கு குயிலின்பன் தற்சமயம் சகல வாகனங்களும் வெளியில் சென்றுள்ளதாக குறிப்பிட்டார். பொது மக்களிடம் ஒரு உழவு இயந்திரத்தைக் கேட்டுப் பெற முடியாதா? என அந்தப் பெண்போராளி கேட்டதற்கு அவர் பொது மக்களின் உழவு இயந்திரங்கள் அனைத்தும் நடமாடும் இடம் பெயர்ந்தோர் முகாம்களாகவே உள்ளன. உழவு இயந்திரப் பெட்டியில் ஒரு தறப்பாளைப் போட்டு விட்டு மலைப் பகுதிகளில் இருந்து தேவைக்கேற்ப ஊருக்குள் வந்து போவதாகவும் குறிப்பிட்டார். இடம் பெயர்ந்தோர் முகாம்களில் ஒரு வலய முகாம் பற்றிய தகவல் எனக்குக் கிடைத்துவிட்டது.

குயிலின்பன் அனுப்பிய போராளியுடன் நான் அழிவுகளையும், முகாம்களையும் பார்க்கப் புறப்பட்டேன்.

X X X

சகல பொதுக் கட்டடங்களும் இடம் பெயர்ந்தோர் முகாம்களாகவே காணப்பட்டன. ஆலயங்களும் அவ்வாறே. தாண்டியடியில் ஒரு மலையில் மக்கள் மரங்களைப் போட்டு, இருப்பதைக் கண்டேன். அவர்களிடம் விசாரித்ததில் பன்னிரண்டு குடும்பங்கள் இங்கு குடியிருப்பதாகக் குறிப்பிட்டனர். முழுவதும் கல்லால் ஆனா மலையில் குழந்தைகுட்டிகளுடன் இருக்கின்றார்கள் என்பது தான் இதில் உள்ள விடயம். தவறி ஒரு குழந்தை கீழே விழுந்தாலும் காயமோ, மரணமோ நிச்சயம். ஆனாலும் அலை வந்த உயரம், அது ஏற்படுத்திய அதிர்ச்சிதான் இந்தமலை வாசத்துக்கு அவர்களை தூண்டியது என்பதை உணரமுடிந்தது. மலைக்குக் கீழே மூன்று அங்குலமே தேங்கியுள்ள நீரில் ஒரு பெண்மணி பல்லுத் தீட்டி முகம் கழுவுவதையும் கண்டேன். இது ஏற்படுத்தப் போகும் சுகாதார விளைவு பற்றிய பயம் ஏற்படவே இது குறித்து சுகாதாரக் குழுவிடம் தெரிவிப்பது என முடிவெடுத்தேன். கழுத்தில் ‘ஸ்டெதெஸ்கோப்’ சகிதம் செல்வதே நல்லது அப் பொழுது தான் ஏற்றுக் கொள்வார்கள் என நான் எண்ணிக் கொண்டேன்.

X X X

தொடர்ந்து செல்கையில் கோமாரியில் சகல இடங்களுமே அழிந்திருப்பதைக் கண்டேன். அங்கிருந்த அதிரடிப்படை முகாமும் அழிந்திருந்தது. உலக தரிசனம் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு ஓரளவு மிஞ்சியிருந்த Y.M.C.A கட்டடத்தில் இருந்து அதிரடிக் படைக்குச் சொந்தமான பொருட்கள் அகற்றப்பட்டுக் கொண்டிருந்தன. எம்மை வழிமறித்த முகாம் பொறுப்பதிகாரி வாகனத்துக்கு டீசல் இல்லையென்றும், மோட்டார் சைக்கிளை தருமாறு கேட்டார். தாங்கள் தெற்கே ஒரு கிலோமீற்றர் தூரத்தில் புதிய முகாம் அமைத்திருப்பதாகவும் கூறினார். போராளியும், மோட்டார் சைக்கிளைக் கொடுத்துதவினார்.

அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி தன்னை இன்ஸ்பெக்டர் தேசவிவாய என்று அறிமுகப்படுத்தினார். முகாம் முழுமையாக அழிந்த போதும், ஒருவருமே உயிரிழக்கவில்லை என்றும் சாதித்தார். ‘இத்தனை வருசம் சண்டை போட்டும் அஞ்சு நிமிசத்தில எல்லாம் முடிஞ்சுது’ என்றெல்லாம் தத்துவம் சொல்லிவிட்டு இறுதியாக ‘ஒரே ஒரு ஆசை வாழ்க்கையில் ஒரு தரம் யாழ்ப்பாணம் பார்க்கவேணும் என்றார்.’

X X X

தொடர்ந்து செல்கையில் கோமாரிப் பாலம் உடைந்திருந்ததைக் கண்டு இன்று பயணத்தைத் தொடர்வது சாத்தியமில்லையென தீர்மானித்து திரும்பினோம்.

வழியில் கத்தோலிக்க ஆலயத்தில் தங்கியிருந்த மக்களுக்கு விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினர் சேவையை வழங்கிக் கொண்டிருந்தனர். போராளி மருத்துவர் தணிகை, நோயாளர்களைப் பரிசோதித்து மருந்துத் துண்டை எழுதிக் கொடுக்க முதலுதவிப் பயிற்சி பெற்ற தொண்டர்கள் மருந்தை வழங்கிக் கொண்டிருந்தனர். இங்கு குடிநீராகப் பயன்படுத்தும் கிணறுகளுக்கு குளோரினும் வழங்கினர்.

அங்கேயிருந்த இன்னொரு போராளி மருத்துவரான தூயவனுடன் உரையாடினேன். வழியில் இருந்த காஞ்சிரங்குடா முகாமைச் சேர்ந்த படையினர் ஒரு தொகுதி மருந்துகள் கேட்டுப் பெற்றதாகக் குறிப்பிட்டார். இந்த நிலைமையில் எந்த வழியிலாவது பாதிப்புற்ற மக்களுக்கு வைத்தியசேவை நடைபெறவேண்டுமென்பதிலுள்ள தமது துடிப்பை வெளிப்படுத்தினர். இந்தச் சமாதான காலத்தில் இதே காஞ்சிரங்குடா படையினர்தான் இந்தப் பகுதியைச் சேர்ந்த ஏழு பொது மக்களைச் சுட்டுக்கொன்று, இருபத்தைந்து பேரைக் காயப்படுத்தியது அப்போது நினைவுக்கு வந்தது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களைக் கொண்ட அணியொன்று வைத்திய நிபுணர் புவிநாதன் தலைமையில் அம்பாறையில் பணியாற்றிவிட்டுச் சென்றுள்ளதாகவும், இங்கிலாந்திலிருக்கும் இரு வைத்தியர்கள் நான்கு மருத்துவ மாணவர்கள், ஒரு தாதி உள்ளடங்கிய குழுவொன்று அம்பாறையில் பணியாற்ற அடுத்தநாள் வரவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

உலகின் எந்த மூலையில் இருந்தாலும், தாயகத்தில் ஒரு அவலம் என்றால், ஓடோடி வந்துதவும் அவர்களின் குணம் “தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும்” என்ற பழமொழியை நினைவூட்டியது.

தொடர்ந்து கனடாவிலிருந்தும் ஒரு மருத்துவகுழு வரவுள்ளதாகத் தூயவன் தெரிவித்தார். *தொடரும*

## உங்களுக்கு புத்தாண்டு யோகம் எப்படி?

### துலாம்

மனதில் பட்டதைப் பளிச்சென்று சொல்லிவிடும் தன்மை கொண்ட துலாம் ராசி அன்பர்களே! சுக்கிரனை ஆட்சிக் கிரகமாகக் கொண்ட நீங்கள், கலை ஆர்வமிக்கவர்களாக இருப்பீர்கள். நீதி, நேர்மை எப்பக்கம் என்று எண்ணுகிறீர்களோ அப்பக்கம் நின்று வாதாடுவீர்கள். உங்களுக்கு இந்த ஆண்டு இனிமையானதாக அமையும். கடந்த ஆண்டின் கசப்பான அனுபவங்கள் மறையும், முக்கிய கிரகங்கள் எதுவுமே சாதகமற்ற இடத்தில் இருந்ததால் தான் பின் தங்கிய நிலையில் இருந்து எண்ணற்ற இடர்பாடுகளை அனுபவித்து வந்திருப்பீர்கள் சனிபகவான் தற்போது வக்கிரம் அடைந்திருந்தாலும், அவர் நன்மைதர இயலாத நிலையில் தான் உள்ளார். வக்கிர நிவர்த்திக்கு பின்னரும் அவரால் நன்மை தர முடியாது. அவர் உங்கள் முயற்சியில் தடையை கொடுத்திருப்பார். ராகு நிலையான இடத்தில் இருக்க விடாமல் அலைக்கழித்திருப்பார். கேதுவும் தன் பங்கிற்கு முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைபோட்டிருப்பார். குரு பகவானின் சாதகமற்ற நிலையால் வாழ்வில் துயர சம்பவங்களை சந்தித்திருக்கலாம். இருப்பினும் சனியின் பார்வையால் சிற்சில நன்மைகளை பெற்றிருக்க தவற மாட்டீர்கள். அதன்மூலம் வாழ்வில் தன்னம்பிக்கை கிடைத்திருக்கும்.

இந்தக் கிரகங்களின் நிலை 2005 ஆம் ஆண்டு தொடக்கத்திலும் நீடிக்கும். இந்த ஆண்டு முதல் ராகு - கேது பெயர்ச்சி வருகிறது. பிப்ரவரி 28 ஆம் திகதி நிகழும் அந்தப் பெயர்ச்சிக்கு பின் ராகு 6 ஆம் இடத்துக்கு வருவார். அதன் பின் அவர் நன்மை தரத் தொடங்குவார். . அதன் மூலம் உங்கள் முயற்சிகள் அனைத்தும் கைகூடும். பொருளாதார வளம்மேம்படும். கேது உங்கள் ராசியில் இருந்து 12 ஆம் இடததிற்குமாறுவார். இது சிறப்பான இடம் அல்ல என்றாலும், அவர் இதுவரை கொடுத்து வந்த தடையை இனி கொடுக்கமாட்டார். சிறுசிறு உடல் உபாதைகளைத் தரலாம். சனிபகவான் தற்போது நன்மை தரும் இடத்தில் இல்லை என்பதை முன்பே பார்த்தோம். அவர் ஜூன் 27 ஆம் திகதி உங்கள் ராசிக்கு 10 ஆம் இடத்திற்கு வருகிறார். இதுவும் சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. தொழிலில் அவர் சிற்சில பிரச்சினைகளை தரலாம். குருபகவான் செப்டம்பர் 14 ஆம திகதி உங்கள் ராசிக்கு வருவார். இது உகந்த இடம் அல்ல என்றாலும் அவரது பார்வைகள் அனைத்தும் சிறப்பானதாக அமையும். அதன் மூலம் பல வகையில் முன்னேற்றத்தைக் காணலாம்.

மேற்கண்ட முக்கிய கிரகங்களின் நிலையில் இருந்து விரிவான பலனை காணலாம்.

ஆண்டின் தொடக்கத்தில் தடைகளைக் கடந்தே எதையும் வெற்றிகரமாக முடிக்க வேண்டியிருக்கும். ஆனால் மார்ச் மாதத்தில் இருந்து எண்ணியது இனிதே நிறைவேறும். பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். தேவையான பொருட்களை வாங்கலாம். ஜூன் 27 ஆம் திகதிக்குப் பிறகு மதிப்பு மரியாதை சுமாராக இருக்கும். சனியால் உங்கள் செல்வாக்குக்கு பங்கம் வர வாய்ப்புண்டு. எனவே வீண் விவாதங்களில் ஈடுபடாமல் ஒதுங்கி இருக்கவும்.

**குடும்பம்** :- வீட்டிற்குத் தேவையான வசதிகள் கிடைக்கும். கணவன், மனைவியிடையே அன்பு நீடித்தாலும் ஏதோ காரணத்தால் குடும்பம் பிரிந்திருக்கும் நிலை ஏற்பட்டிருக்கலாம். அதே போல் தூரத்து உறவிகர்கள் வகையில் இருந்து விரும்பத்தகாத செய்தி வந்திருக்கலாம். இப்படிப்பட்ட துர்பலன்கள் செப்ரெம்பர் மாதத்திற்கு பிறகு சீரடையும், பிரிந்திருந்த குடும்பம் ஒன்று நேரும். உறவினர்கள் மத்தியில் இருந்த மனக் கிலேசம் மறையும் புதிய உறவு ஏற்படும் . திருமணம் போன்ற சுய நிகழ்ச்சி நடக்கும். பல ஆண்டுகளாக தடைப்பட்டு வந்த திருமணம் கைகூடும் புதிய வீடு, சொத்து போனறவை வாங்கலாம். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பெண்கள் மூலம் அதிக பலனை எதிர்பார்க்கலாம்.

**உத்தியோகம** :- கடந்த காலங்களில் இருந்து வந்த பிற்போக்கான நிலை படிப்படியாக மாறும் அதுவரை விடா முயற்சியும் பொறுமையும் தேவை. வேலைப்பளு அதிகரிக்கலாம். உங்கள் பொறுப்புகளைத் தட்டிக்கழிக்காமல் நீங்களே செய்வது சாலச்சிறந்தது. சிலருக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு கிடைக்காமல் போகலாம். ஆனால் செப்ரெம்பர் மாதத்திற்குப் பிறகு குருவின் பார்வையால் உங்கள் நிலை மேம்படும். உங்கள் ஆற்றல் மேல் அதிகாரிகளுக்கு புலப்படும். அதன் மூலம் நல்ல பதவி கிடைக்கும். ஆனால் வேலைப்பளு தொடர்ந்து அதிகமாகவே இருக்கும். விரும்பிய இடத்திற்கு மாற்றம் பெறலாம். வேலை நிமித்தமாகக் குடும்பத்தை விட்டுப் பிரிந்தவர்கள் இனி ஒன்று சேருவர். எது எப்படியானாலும் வேலையில் கண்ணும் கருத்துமாக இருப்பது உங்களுக்கு நல்லது.

**வியாபாரம்** :- தொழிலில் இருந்துவந்த பின் தங்கிய நிலைமாறும். லாபம் அதிகரிக்கத் தொடங்கும். எதிரிகளின் சதி எடுபடாமல் போகும். அதே நேரம் சனி சாதகமாக இல்லாததால் எந்தத் தொழிலிலும் ஏனோதானோ என்ற நிலையில் இருந்து விடாதீர்கள். மிகுந்த அக்கறை கொண்டு செயல்படுத்துங்கள். புதிய வியாபாரம் அனுகூலத்தைக் கொடுக்கும். ஆனாலும் முதலீடு செய்ய வேண்டாம். உடல் உழைப்பை அதிகம் செலவிடுங்கள் கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும். பெண்களைப் பங்குதாரர்களாக கொண்ட வர்த்தகம் நல்ல வளர்ச்சி காணும்.

பெண்கள் திருப்திகரமாக இருப்பர். செப்ரெம்பர் மாதத்திற்குப் பிறகு வாழ்க்கையில் குதூகலம் ஏற்படும். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். பிறந்த வீட்டில் இருந்து பொன் பொருட்கள் வந்து சேரும். வேலை செய்யும் பெண்கள், வியாபாரம் செய்யும் பெண்கள் நல்ல வளத்தை காண்பர். உடல் நலத்தை பொறுத்துவரை சுமாராக இருக்கும். பித்தம், மயக்கம் மற்றும் கண் தொடரபான உபாதைகள் வரலாம். மார்ச் மாதத்திற்குப் பிறகு இந்த வகையில் சிறு உபாதைகள் வந்தாலும் உடனே சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

**பரிகாரம்** :- ஆண்டு முழுவதும் சனி சாதகமற்ற இடத் தில் இருப்பதால் அவருக்கு எள்சோறு படைத்து வழிபடுங்கள். சனிக்கிழமை தோறும் பெருமாள் கோவிலுக்குச் சென்று வாருங்கள். ஊன முற்ற ஏழைகளுக்கு உங்களால் இயன்ற உதவியை செய்யுங்கள். மேலும் குரு பகவானுக்கும் பரிகாரம் செய்யவும். வியாழக்கிழமை தட்சணா மூர்த்திக்கு அர்ச்சனை செய்து, குருஸ்தானத்தில் உள்ள ஆசானுக்கு உதவி செய்யுங்கள். ஆண்டு முழுவதும் கேது சாதகமறற நிலையில் இருப்பதால் கொள்ளுதானம் செய்யவும். வசதி படைத்தவர்கள் ஏழைகளுக்கு ஆடுவாங்கி கொடுத்து அவர்கள் வாழ வழிவகுக்கலாம்.

### சுனாமி அலை தாக்குதலினால்

# கடலிலிருந்து தூக்கி வீசப்பட்ட டொல்பின்களை மீட்க முயற்சி!

சுனாமி அலைகளால் கடலில் இருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ள ஏரிக்குத் தூக்கிவீசப்பட்ட டொல்பின் மீன்களை உயிருடன் மீட்க முயற்சி நடந்து வருகிறது.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி தாய்லாந்தை சுனாமி அலைகள் தாக்கியபோது, டிகெட் தீவும் பாதிக்கப்பட்டது.

அப்போது கடலில் வாழ்ந்த பெண் டொல்பினும் அதன் குட்டியும் கடல் நீரால் அடித்து வரப்பட்டு அருகே உள்ள கோகோ ஏரியில் வீழ்ந்தன.

இந்த ஏரி கடற்கரையில் இருநது ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது.

ஏரியில் உள்ள டொல்பின்களுக்கு சிறிய மீன்களை உணவாகப் போட்டு வருகிறார்கள்.

இந்த டொல்பின்கள் அரிய வகை இனமாகும். எனவே இவற்றை உடன் மீட்டு கடலில் விட அதிகாரிகள் முயற்சி எடுத்து வருகிறார்கள்.

இதற்காக கிரேக்க நாட்டைச் சேர்ந்த சுழியோடும் நிபுணர்கள் ஏரிக்குள் இறங்கி முயற்சி செய்தனர். ஆனால் அவர்களால் டொல்பின்களை பிடிக்க முடியவில்லை.

மறுநாள் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் வலைகளுடன் ஏரியில் இறங்கி அவற்றை பிடிக்க முயன்றனர். அந்த முயற்சியும் தோல்வியில் முடிவடைந்தது. எட்டு நாட்களாக டொல்பின்கள் ஏரியில் தவிக்கின்றன.

இது பற்றி டொல்பின் - சுறா மீன் ஆய்வு மைய அதிகாரி ஜிம் ஸ்டைரஸ் கூறியதாவது -

ஏரியில் சிக்கியுள்ள டொல்பின்கள் 9 அடி நீளம் வளரக் கூடியன. இதன் எடை 200 கிலோ இருக்கும். இந்த டொல்பின்கள் உடல் நலத்துடன் உள்ளன. நாங்கள் போடும் சிறிய மீன்களை இவை சாப்பிடவில்லை



டொல்பின்கள் பல நாட்கள் உணவின்றி உயிர் வாழக்கூடியவை. இருந்தாலும் இந்த இரண்டு டொல்பின்களையும் கடலில் கொண்டு போய் விடுவோம் எனத் தெரிவித்தார்.

# கடல் மீனில் கிருமி இல்லை சாப்பிடலாமென அறிவிப்பு!

சுனாமி பாதித்த பகுதிகளில் பிடிபடும் மீன்களைச் சாப்பிட்டால் நோய் உண்டாகும் என்ற கருத்து பரவலாக இருந்து வருகிறது. இதனால் பொதுமக்கள் கடல் மீன்களை வாங்க தயக்கம் காட்டி வருகிறார்கள்.

சுனாமி பேரலை சம்பவத்துக்கு பின்னர்தற்போது மீனவர்கள் கடலுக்கு செல்கிறார்கள். பீதி கலந்த பயத்துடன் கடலுக்குள் சென்று மீன் பிடித்து வந்தாலும் அதை வாங்க யாரும் முன்வரவில்லை.

இதனால் மீன்கள் விற்பனையாகாமல் தேங்கியுள்ளன. மீன்கள் விற்பனையாகாமல் கிடப்பதை அறிந்த மீனவர்கள் வேதனை அடைந்தனர்.

இந்த நிலையில் சுனாமி பாதித்த மீன்களைச் சாப்பிடலாமா? வேண்டாமா? என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தண்டையார் பேட்டை தொற்று நோய் மருத்துவமனை, மற்றும் வேப்பேரி கால்நடை மருத்துவக் கல்லூரி ஆகியவை இணைந்து ஆய்வு மேற்கொண்டன.

ஆய்வு முடிவில் சுனாமி பாதித்த பகுதிகளில் பிடிபட்ட மீன்களில் நோய்க்கிருமிகள் எதுவும் இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட மீன்கள் தண்டையார் பேட்டை, மெரினா, ஐஸ்ஹவுஸ், பகுதிகளில் பிடிக்கப்பட்டதாகும், மீன்களை உயிருடன் பிடித்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக மாநகராட்சி சுகாதாரத்துறை பிரதி ஆணையாளர் கே.மணிவாசன் தெரிவித்துள்ளார்.

### அந்தமானில் மீண்டும் பூமியதிர்வு

# ஆந்திராவின் கடற்கரையிலும் பாரிய அலையெழுமென அறிவிப்பு

அந்தமானில் நேற்று 6 றிக்டர் அளவிலான பூமி அதிர்ச்சி ஏற்பட்டது.இதனால் ஆந்திராக் கடற்கரையில் ராட்சத அலைகள் எழும் என்று எச்சரிக்கப்பட்டது


இந்தோனேசியாவில் உள்ள சுமாத்ரா தீவை மையமாகக் கொண்டு கடந்த மாதம் 26ஆம் திகதி றிக்டர் அளவுகோலில் 8-9 அளவிலான பூமி அதிர்ச்சி கேரளா, அந்தமான், நிகோபார்தீவுகள், இந்தோனேசியா, இலங்கை, தாய்லாந்து ஆகிய இடங்களில் உணரப்பட்டது. அப்போது பூமி அதிர்ந்தது.

இந்தப் பூமி அதிர்ச்சியின் காரணமாக மேற்கண்ட நாடுகளில் சுனாமி அலைகள் எழும்பி கடற்கரைப் பகுதியைத் தாக்கின. இதில் லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பலியானார்கள்.

இந்தப் பூமி அதிர்ச்சியைத் தொடர்ந்து சுமாத்ரா தீவை மையமாகக்கொண்டு தொடர் நில அதிர்வுகள் ஏற்பட்டன. அதில் ஒரு அதிர்வு 6.3 அளவுக்கு இருந்தது. இந்தத் தொடர் அதிர்வுகளால் சுனாமி அலைகள் பெரும்பாலான நாடுகளைத் தாக்கின உணரப்பட்டன. அதில் கடந்த சனிககிழமை ஏற்பட்ட அதிர்வு றிக்டர் அளவு கோலில் 6.3 அளவுக்கு இருந்தது. அந்தமானில் மட்டும் இதுவரை 99 முறை தொடர் நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அந்தமானின் மேற்கு கடற்கரையை மையமாகக் கொண்டு றிக்டர் அளவுகோலில் 6 அளவிலான பூமியதிர்ச்சி உணரப்பட்டதன் காரணமாக கடற்கரையில் வழக்கமான அலைகளை விட ஒரு மீற்றர் உயரத்துக்கு அதிகமாக அலைகள் எழும்பி தாக்கும் என்று விசாகப்படடினத்திலுள்ள புயல் எச்சரிக்கை மையம் நேற்றுமுன்தினம் இரவு அறிவித்தது.

ஆந்திரா கடற்கரையில் வழக்கத்தைவிட பெரிய அலைகள் எழும்புவதால் தமிழக கடற்கரையிலும் அதேபோன்ற அலைகள் எழும் அபாயம் உள்ளது.



இலங்கையில் உதவிப் பணிகளில் ஈடுபடுவதற்கு புறப்படத் தயாராகும் கனடியத் துருப்புக்கள்.

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்காக நிதியுதவி செய்தோர் விபரம் வருமாறு

கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில், 'நமது ஈழநாடு' நிறுவனம் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்களிடம் நிவாரண உதவிகளைச் சேர்த்தது இதன்போது பணமாக உதவியோர் விபரம் வருமாறு -

| பெயர் | முகவரி | பெறுமதி (ரூ) |
|---|---|---|
| ஆ மயில்வாகனம் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 200 |
| க.அம்பலவானர் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 200 |
| க.தியாகராஜா | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 100 |
| ஆ.ஜிப்பி | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 500 |
| சி.சுரேஷ் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 200 |
| மோகன் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 100 |
| சு.மனோன்மணி | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 100 |
| சு.பாலன் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 1000 |
| வசந்தகுமார் | சித்திவிநாயகர் ஸ்ரோர்ஸ் மானிப்பாய். | 100 |
| கீதா ரேடர்ஸ் | ஆறுகால்மடம் | 50 |
| ஐயர் | ---- | 100 |
| T.சிவலிங்கம் | ஆறுகால்மடம் | 100 |
| ஜெகன் | ஆறுகால்மடம் | 100 |
| த.ராஜன் | ஆனைக்கோட்டை | 200 |
| சந்திரன் | ஆனைக்கோட்டை | 100 |
| ஜனனி பார்மஸி | ஆனைக்கோட்டை | 100 |
| ஒக்ஸ்போட் டிரேடர்ஸ் | ஆனைக்கோட்டை | 100 |
| மணிவன்னன் | ஆனைக்கோட்டை | 200 |
| இராசையா | ஆனைக்கோட்டை | 100 |
| செல்வநாயகம் | ஜெயா பான்சி மானிப்பாய் | 50 |
| ஸ்ரீ முருகன் கபே | ஆனைக்கோட்டை | 50 |
| த.ஜெகதீஸ்வரன் | ஆனைக்கோட்டை | 200 |
| ஐ.யோகேஸ்வரன் | நவாலி | 200 |
| ஆ.ஜெயகுமார் | நவாலி | 500 |
| இ.கனேஸ்வரி | நவாலி | 150 |
| ஜீவரட்னம் | நவாலி தெற்கு, நவாலி | 100 |
| K.E.G.M Photo | நவாலி | 100 |
| யோகேஸ்வரன் | நவாலி | 100 |
| சு.புலேந்திரன் | நவாலி | 200 |
| லாவன்யா வீடியோ சென்ரர் | துனைவிச் சந்தி | 200 |
| இ.நாகமுத்து | துனைவிச் சந்தி | 500 |
| க.தெய்வானிப்பிள்ளை | அராலி வடக்கு | 200 |
| ந.தர்மலிங்கம் | செட்டியார் மடம் | 500 |
| நேசன் | ---- | 50 |
| டேவிட் நவரட்ணராஜா | 42, அச்சுக்குடா வீதி, சுண்டுக்குளி | 50 |
| சண்முகலிங்கம் | 32/1, அச்சுக்குடா வீதி, சுண்டுக்குளி | 100 |
| எஸ்.எஸ்.மரியதாஸ் | 32/16,அச்சுக்குடா வீதி, சுண்டுக்குளி | 50 |
| எம். வேதநாயம் | 16/3, மூளாய் வீதி, சுண்டுக்குளி | 200 |
| எ.நெல்சன் | 47/2, மத்தியூஸ் வீதி | 100 |
| ஜோச் | மத்தியூஸ் வீதி | 100 |
| அருளானந்தம் | 6/3, மத்தியூஸ் வீதி, யாழ் | 500 |
| ஏ.சந்திரன் | 41/4, மத்தியூஸ் வீதி, யாழ் | 100 |
| சந்தியாப்பிள்ளை யேம்ஸ் | மத்தியூஸ் வீதி, யாழ் | 50 |
| ஜே.ஏ.நவரட்னம் | மத்தியூஸ் வீதி, யாழ் | 500 |
| செ.ஜெயராஜா | மத்தியூஸ் வீதி, யாழ். | 200 |
| கி.கிரிஸ்தோப்பர் | குருநகர் | 200 |
| ஒரு அன்பர் | குருநகர் | 100 |
| எம்.ரூபன் | 19, புதுமைமாதா கிழக்கு வீதி,யாழ். | 300 |
| ஜோச் | ..... | 200 |
| சிங்கராஜா | ..... | 1000 |
| ரொபின் | குருநகர் | 250 |
| செ.விஜேய் | குருநகர் | 500 |
| எஸ்.நவீந்திரன் | குருநகர் | 50 |
| சூ.தாசியஸ் | குருநகர் | 100 |
| எவ்.கிரிஸ்ரி | குருநகர் | 500 |
| பெ.பிரின்ஸ் | குருநகர் | 200 |
| பேனாட் துரைசாமி | குருநகர் | 200 |
| பாலன் | குருநகர் | 100 |
| எஸ்.மெக்ஸ்சி | குருநகர் | 400 |
| செ.யேசுதாசன் | குருநகர் | 100 |
| நிரோஜினி | கைலயங்கிரி, மாலிகைவீதி, மீசாலை | 500 |
| சிட்டி பொட் | ..... | 100 |
| பாக்கியலட்சுமி | ..... | 500 |
| ஞானசீலன் | ..... | 100 |
| என்.பாஸ்கனர் | ..... | 50 |
| கலிசனா | ..... | 200 |
| பவி ஸ்ரோர்ஸ் | ..... | 100 |
| செல்லம்மா | ..... | 1000 |
| மனோரஞ்சன் | ..... | 250 |
| விஜயராணி | ..... | 150 |
| உதயகுமார் | ..... | 100 |
| பிரசாந் | ..... | 100 |
| செல்வம் | ..... | 50 |
| விக்ரம் | ..... | 100 |
| கந்தவனம் | ..... | 400 |
| அருள் செல்வரட்னம் | ..... | 100 |
| அ.ரேக்கா | ..... | 100 |
| தங்கம் | ..... | 100 |
| ஆரோக்கியநாதன் | ..... | 50 |
| அலன் | முதலாம் குறுக்குத் தெரு | 100 |
| பொ.சிந்தூரன் | ..... | 50 |
| ஜே.ரவி | ..... | 50 |
| குயின் கென்ரன் | ..... | 100 |
| யோன் கள்பேட் | ..... | 200 |
| டக்லஸ் | ..... | 200 |
| எம்.எஸ்.யேம்ஸ் | ..... | 100 |
| அக்னேஸ் | ..... | 100 |
| விமலதாஸ் | ..... | 100 |
| கபோடீன் | ..... | 100 |
| எஸ்.மரியதாஸ் | ..... | 100 |
| ஏ.ராகவன் | ..... | 250 |
| ஜஸ்ரீன் | ..... | 300 |
| ஜீவன் | குருநகர் | 100 |
| ஞானம் கடை | குருநகர் | 500 |
| சிற்றி போய் | குருநகர் (நாளை தொடரும்) | 200 |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



இலங்கையில் மீட்பு நடவடிக்கைக்கான அமெரிக்கப் படையினர் கொண்டுவந்த புல்டோசர் மற்றும் பிளக்கொக் ரக ஹெலி என்பன விமானத்திலிருந்து இறக்கப்படுகின்றன.

## போராளி தாக்கப்பட்ட சம்பவம்;

# கண்காணிப்புக்குழு விசாரணை அம்பாறையில் இன்று நடைபெறும்

(அம்பாறை)

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்திற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் நிவாரணப் பொருட்களை எடுத்துச் சென்றவேளையில் ஏற்பட்ட முரண்பாடுகள் தொடர்பாக இன்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

திருக்கோவில் பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் உணவுப்பொருட்களை எடுத்துச்சென்றவேளை அந்தப் பொருட்களை படையினர் தடுத்து நிறுத்தியமையால் இரு தரப்பிற்கும் இடையே முரண்பாடு தோன்றியது.

இதனையடுத்து இந்தவிடயம் தொடர்பாக யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு முறைப்பாடு செயயப்பட்டிருந்தது.

இந்தப்பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் விசேட அதிரடிப்படையினருக்குமான சந்திப்பு ஒன்று நேற்று அம்பாறை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இடம் பெற்றது.

இந்த சந்திப்பின்போது சம்பவம் இடம் பெற்ற இடத்திற்கு இன்று நேரில் சென்று இருதரப்பினருடனும் நேரடியாகக் கலந்துரையாடி தீர்வினை ஏற்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் சார்பில் மட்டு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசலயன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், மனோஜ் ஆகியோரும் -

விசேட அதிரடிப் படையினர் சார்பில் கிழக்குப் பிராந்திய விசேட அதிரடிப்படைப் பணிப்பாளர் உபுல் சிறிவர்த்தன, திருக்கோவில் முகாம் பொறுப்பதிகாரி ரத்நாயக்க, கண்ணகிபுர முகாம் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லெவன்கம ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சுனாமி அழிவுகள் குறித்து இன்று வவுனியாவில் மாநாடு

(வவுனியா)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் ஒன்று இன்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ இன்று வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், படை உயர் அதிகாரிகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட சுனாமி அனர்த்த நிவாரண புனருத்தாரண குழுவுக்கு ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ தலைமை வகிக்கிறார்.

அத்துடன், மன்னார் மாவட்டத்திலிருந்து சுனாமி அனர்த்த அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியாவில் அகதிகளாகத் தங்கியிருக்கும் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து அவர்களது குறைகளை ஆளுநர் கேட்டறிவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளுநரின் செயலாளர் எஸ். அமிர்தலிங்கமும் இந்த மாநாட்டில் கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நிலாவெளி கடற்படை முகாமை

# மீளமைக்கும் பணியில் இந்தியக்கடற்படையினர்

(திருகோணமலை)

கடற்கொந்தளிப்பால் முழுமையாக அழிந்துபோன திருமலை நிலாவெளி கடற்படைமுகாமை மீளமைக்கும் பணி இந்தியக் கடற்படையினரின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிழக்கிலுள்ள கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இந்தியக் கடற்படையினரின் உதவியுடன் நிலாவெளி கடற்படை முகாமை மீள அமைக்கும் பணி பெருமளவில் முடிவடைந்துள்ளது. இலங்கை கடற்படையினருடன் இணைந்து 60 இந்தியக் கடற்படையினரும் இந்தப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவற்றைத் தவிர இத்தாலிய அரசின் உதவியுடன் கிண்ணியா மருத்துவமனையும் மீள புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் அழிந்து போன மருத்துவமனைக்கு அருகில் 80 படுக்கை வசதிகள் அடங்கிய விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. என அவர் தெரிவித்தார். (தே)

# 13000 கோடிக்கு மேல் சுனாமியால் இழப்பு!

## மத்திய வங்கி தகவல்

சுனாமி கடற்கொந்தளிப்பால் நாட்டின் பொருளாதாரத்துக்கு 13 ஆயிரம் கோடி ரூபா முதல் 18 ஆயிரம் கோடி ரூபா வரையான இழப்பு ஏற்பட்டுள்ளதென மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஆனால், பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளால் இந்த இழப்பீட்டின் தாக்கம் கணிசமான அளவு குறையுமென மத்திய வங்கியின் ஆளுநர் சுனில் மெண்டிஸ் தெரிவித்தார்.

சர்வதேச சமூகங்கள் வழங்கி வரும் உதவிகளிலேயே பொருளாதாரத்தின் எதிர்மறையான தாக்கத்தைக் குறைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

## சுனாமியால் பாதிக்கப்பட்டோரின்

# பயண அனுமதியை விரைவுபடுத்த

## அரசாங்கத்தின்...

இதன்படி பாதிக்கப்பட்டு நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகள்

# நலன்புரி முகாம்களைப்...

நேற்று முற்பகல் 10 மணிமுதல் 11 மணிவரை திருகோணமலை மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம் பெற்ற கூட்டமொன்றில் ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் நலன்புரி நிலையங்களைத் தாம் பொறுப்பேற்கப்போவதாக படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து தமது தலைமைப்பீடத்துடன் தொடர்புகொண்டு

நலன்புரி நிலையங்களின் நிர்வாகத்தை பலவந்தமாகப் பொறுப்பேற்றுள்ளதாக அறியமுடிந்தது. எனினும் நலன்புரி நிலையங்கள் தொடர்பாக அறிய மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனுடன் தொடர்புகொள்ள முயன்றும் அவருடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை.

திருகோணமலைக்கு அனுப்பப்பட்ட நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட

சுனாமியால் பாதிக்கப்பட்டோரின்

# பயண அனுமதியை விரைவுபடுத்த கனடியத் தூதரகம் நடவடிக்கை!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கனடாவுக்குச் செல்வதற்கான பயண அனுமதி விண்ணப்பங்களை விரைவாகப் பரிசீலனை செய்யவுள்ளதாக கொழும்பிலுள்ள கனடியத் தூதரகம் அறிவித்துள்ளது.

சுனாமி அலைகளின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சேர்ந்த பொதுமக்களின் இரத்த உறவுகள் கனடாவில் வாழ்ந்து வரும் பட்சத்தில் அவர்கள் மூலம் பயண அனுமதிக்குரிய ஆவணங்களைப் பெற்று சமர்ப்பிக்க முடியும் என்றும் இந்த விண்ணப்பங்களை விரைவாக பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி அனர்த்தத்தில் அநாதைகளாக்கப்பட்ட சிறுவர்களை அவர்களின் உறவினர்கள் கனடாவுக்கு அழைத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் கனடிய குடிவரவுத்துறை அமைச்சர் யூடி தெரிவித்துள்ளார். (01)

## யாழ்.வந்த பின்னர்தான்...

இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களைச் சீர்செய்வதற்காகவே வெளிநாட்டுத் துருப்புக்கள் இங்கு வந்துள்ளன. இவர்கள் சமாதானத்தைக் குழப்பும் வகையில் இடையூறுகளை மேற்கொண்டால் அதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.

மேலும் விடுதலைப் புலிகளுக்காக இடைக்கால நிர்வாகத்தைக் கொடுப்பதன் மூலமே நாட்டில் சமாதான நிலைமையை முன்னெடுக்க முடியும் இந்தச் செயற்பாட்டை நான் 2003 ஆம் ஆண்டிலேயே குறிப்பிட்டுக் காட்டினேன்.

சுனாமியால் ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிடுவதன் நோக்கம் அரசியல்வாதி என்றல்ல. மனிதாபிமான முறையிலேயே நான் இதைப் பார்வையிடுகிறேன்.

சமாதானத்தை மீண்டும் இந்த நாட்டில் அமுல்படுத்த, புலிகளுடன் இணைந்தே நிவாரணப் பணிகளை முன்னெடுக்கவேண்டும்.

இலங்கைக்குக் கிடைக்கும் உதவிகள் அனைத்தும் வடக்கு - கிழக்கு என்ற வேறுபாடின்றி சமமாகப் பகிரப்படல் வேண்டும் என்பதையும் தான் அரசாங்கத்துக்கு வலியுறுத்திக் கூறுவதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (12)

கும் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து அவர்களது குறைகளை

## அரசாங்கத்தின்...

இதன்படி பாதிக்கப்பட்டு நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகள் ஏற்கனவே நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில், அரசாங்க அதிபர்களையும் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதை எதிர்க்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைத் தவிர மற்றைய சகல மாவட்ட அரசாங்க அதிபர்களையும் இராணுவம் மேற்கொள்ளவுள்ள இந்த நிவாரண உதவிப் பணிகளுக்காக இணைந்து செயற்படுமாறு ஜனாதிபதி செயலகம் நேற்று மாலை சகல அரசாங்க அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது.

## பாப்பரசரின்...

வந்த பாப்பரசரின் பிரதிநிதி, நேற்று வன்னியில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை அவதானித்தார்.

இதன்பின்னர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த ஆயர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அனுதாபம் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்ட ஆயர்கள் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு நன்றி தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் யாழ்.ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகமும் கலந்துகொண்டார்.

பெற்ற கூட்டமொன்றில் ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் நலன்புரி நிலையங்களைத் தாம் பொறுப்பேற்கப்போவதாக படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து தமது தலைமைப்பீடத்துடன் தொடர்புகொண்டு பதிலளிப்பதாகத் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

பின்னர் அவர் நடுவப் பணியகத்துடன் தொடர்புகொண்டு பேசிய போது இராணுவத்திடம் நலன்புரி நிலையங்களின் பொறுப்பை வழங்க வேண்டாமென தமக்கு அறிவுறுத்தல் கிடைத்ததாக எழிலன் மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மூலம் இராணு வத்துக்கு அறிவித்தார்.

எனினும் நேற்றிரவு இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி இராணுவத்தினரும், கடற்படையினரும் தொடர்பாக அறிய மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனுடன் தொடர்புகொள்ள முயன்றும் அவருடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை.

திருகோணமலைக்கு அனுப்பப்பட்ட நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட சிங்கள பெரும்பான்மை சமூகததினருக்கு அரச அதிபர் காரியாலய சிங்கள உயரதிகாரிகளின் அனுசரணையுடன் இராணுவத்தினரால் கடந்த 27 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வரும் நிலையில் தற்போது நலன்புரி நிலையங்களின் நிர்வாகம் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும், இந்த அடாவடித்தனத்தை எதிர்த்து சாத்வீக முறையல் போராட்டங்களை நடத்தவுள்ளதாகவும் திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (10)

A/L D.C.M.
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆணைப்பந்தி - இந்து குருகுலம் முன்பாக)
2007
கலை வித்தகம்
ஆரம்பம்:
09 ஜனவரி 2005 - ஞாயிறு காலை 8.00 மணி

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.